REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 25—4—48 | இதழ் 46

## இருக்கக்கூடாது

—❀—

"இதுவரை நாட்டிலே வித்தியாசங்கள் மலிந்து கிடந்தன. ஏழை பணக்காரன், ஜாதிக்கு ஜாதி உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசங்கள் இருந்தன. எதிர்காலத்தில் நாம் அமைக்கும் சமுதாயத்தில் இவ்வித்தியாசங்கள் இருக்கக் கூடாது. மனதிலே வேற்றுமைகளை ஏற்படுத்திச், சச்சரவுகளை ஏற்படுத்துவது இந்த ஜாதி வித்தியாசம். சரித்திரத்தைப் பார்த்தால் நம் நாட்டில்தான் ஜாதி வித்தியாசங்கள் அதிகமாக இருக்கின்றன. எல்லையில்லாத சக்தியுடைய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமானால், மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சி ஏற்பட வேண்டும்."

டி. எஸ். அவினாசிலிங்கம்

(18—4—48)

## கனபாடி கவசத்தைக் காண்டீபம்

15-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டனர். இதன் பலன் என்ன? 100-க்கு 3-பேராக உள்ள பார்ப்பனருக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி கிடைக்கவேண்டிய சட்டசபை ஸ்தாபனம் 7. ஆனால் இன்று அவர்களுக்குக் கிடைத்திருப்பது 49 ஸ்தாபனங்கள். விகிதாச்சாரப்படி மந்திரி வேலையில் இடம் பெறவே முடியாத பார்ப்பனர்களுக்கு, பத்துப்பேருள்ள மந்திரி சபையிலே 4-ஸ்தானம். இவ்வளவு தானா? முதல் மந்திரிவேலையும், சட்டசபைத் தலைவர்கள் பதவியும் அவர்களிடம்தான் என்று சொல்லக்கூடிய அளவிலேயே நிலைமை இருக்கிறது. அதுமட்டுமா! சட்டசபை நடவடிக்கையின் சூத்திரக் கயிறு அவர்களிடம். அத்துடன் நின்றதா! இல்லை! இல்லை! அவர்களின் ஆதிக்கம் இன்று பல துறைகளிலும் வளர்ந்துவிட்டது.

ஒரு சிறு சமுகம் இவ்வளவு ஆதிக்கத்தைப் பெற்றுவிட்டதென்றால், பிறசமுகத்தவருக்கு இடமெங்கே? அவர்களுக்கு நாட்டை ஆளவும், நல்லனபெறும் உரிமையும் இல்லையா? அவர்கள் வரி தந்தும், நாட்டுநலனுக்காகப் பல துறைகளில் வேலை செய்தும், உயர்வான துறைகளிலெல்லாம் தங்க இடமின்றி தவிக்க நேரிடுவது நியாயமானது என்று யாரேனும் நெஞ்சில் கைவத்துக் கூறமுடியுமா! குத்திப்புடைத்துக்குவிக்கதுருவரும், கூசாது கேளாது தின்று வாழவேறு ஒருவரும் என்று சொன்னால், அது நீதியாகுமா? மதத்துறையில் எப்படி அவர்கள் 'மகந்துகளா' இருந்தார்களோ, அதைப்போன்றே 'தேசியத்' துறையிலேயும் அவர்களே 'தலைவர்களாய்' மந்திரிகளாய் வருவதென்றால் அது ஜனநாயகமாகுமா என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### தேசீயத் துறையில் அவர்கள் உயர்ந்ததேன்?

தலைவர்களின் அறிக்கை எடுத்துக் காட்டியபடி, நாம் பார்ப்பனருக்கு சமுதாயத்துறையிலே உயர்வைத் தந்துவிட்டதால், மதத்துறையில் அவர்களைவழிகாட்டியாகக்கொண்டதால்தான் இன்று தேசியத் துறையிலும் அவர்களையே குருமாராகக் கொள்ளும் நிலை வந்து சேர்ந்தது. மதத்துறையிலே அவர்கள் வார்த்தைக்கு மறுபேச்சுக் கூடாது. அப்படிப்பேசினால் நரகம் என்று பயங்காட்டி, உள்ளத்தை அடக்கிவைத்ததைப்போலத்தான், இன்று காங்கிரசாரின் கொள்கை, திட்டம், போக்கு ஆட்சிமுறை முதலியதைக் கண்டித்தாலும், உடனே வருகிறசுயராஜ்யம் தடைப்படும்எனப்பயங்காட்டப்பட்டு, அப்படிப்பேசுபவர்கள்தேசத்துரோகிகள், வெள்ளைக்காரனுக்கு அடிமை என இழிவாகப் பேசப்பட்டும் வந்தனர். எங்கு, மதத்தின் பெயரால் இழைக்கப்படும் அநீதிகளை, கொடுமைகளை எடுத்துக்கூறினால், அப்படிக் கூறுபவர் நாத்திகர் எனத் தூற்றப்பட்டு, பொதுமக்களிடத்திலே துவேஷப் பிரசாரம் செய்யப்படுகிறதோ, அதைப்போலவே தேசீயத் திரை மறைவிலே புகுந்துகொண்டு இழைக்கப்படும் தீங்குகளை எடுத்துக் கூறுபவர்மீது பொதுமக்கள் தப்பான எண்ணம் கொள்ளும்படி செய்யப்படுகிறது. காங்கிரசே கதிமோட்சம் எனக் கருதும் தவறிய தமிழன், பிறகட்சியினரைக் கண்டால் கடுகடுப்பதையும், கண்களை உருட்டி மிரட்டிக் கனைப்பதையும், தோள் வலிமையையும், கை வலிமையையும் கீழே கிடக்கும் கல்லின் வலிமையையும் காட்டுவதைக் கண்டால் தெரியும், துவேஷப் பிரசாரம் மனிதத் தன்மையைக் கூட மாற்றிவிடுவதை. இவ்வளவு துவேஷப் பிரசாரம் செய்யப்பட்டதால்தான் தமிழர்களே தமிழ் தலைவர்களைப் பற்றித் தவறாக எண்ணினர். பெரியாரும் பிறரும் விடாமுயற்சியுடன் செய்த பிரசாரத்தின் பலனாகத்தான் இன்று தமிழரிலே பெருமபாலோர் கண்விழித்தனர்.

இவ்விதமாக, ஒரு சிறு சமுகம், தருக்காலும் தந்திரத்தாலும், வெள்ளை உள்ளங்கொண்டவர்களை மயக்கி, பதவியில் பெரும்பகுதியைப் பிடித்துக்கொள்வதைத் தடுக்கத்தான் பாதுகாப்பு நிச்சயம் தேவை எனத்தலைவர்கள் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு கூறுவதும், இந்நாட்டிற்கு உண்மையான விடுதலை தேவை என்பதற்காகத்தான். ஆற்றை நீந்திக் கடந்து சேற்றில் விழலாமா?

பார்ப்பனரல்லாத சமுகம், விரும்பும் சுயராஜ்யம், எப்படி இருக்க வேண்டுமென்றால், ஒரு சமுகத்தை பிற சமுகம் அடக்கி ஆளவோ, மெஜாரடியிடம் மைனாரிடி சிக்கி வாடுவதோ, அல்லது மைனாரிடியிடம் மெஜாரிட்டி சிக்கிச் சிதையும் விதத்திலே இராமல் எல்லோரும் சம உரிமை பெற்றுவாழும் சுயராஜ்யமாக இருக்கவேண்டுமென்பதுதான். அறிவைத் துணைகொண்டு ஆராய்வோர் அனைவரும் இதை ஒப்புக் கொள்ளமலிரார். இதனைத் தான்

பாரதியாரும்

"பார்ப்பானை ஐயனென்ற
காலமும் போச்சே
வெள்ளைப் பரங்கியைத்
துரை என்ற காலமும்போச்சே"

என்று பாடியுள்ளார். அவர் பாடினார். ஆனால் இன்னமும் அது பலிக்கவில்லை. அதை சாதித்துக் காட்டுவது தான் நமது கட்சியின் வேலை. அதற்குத்தான் உங்களை அன்புடன் அழைக்கிறோம் "வாரீர் வாரீர்" என்று!!

பிரச்னையை விளக்கியும், நமது உறுதியை விளக்கியும், 1939-ல், விடுதலையில், வெளிவந்தது இக்கட்டுரை. ஏளனம் செய்யப்பட்டோம்! மெஜாரிடி மைனாரிடிக்குப் பயப்படுவதா? கடல், கூவத்துக்குப் பயப்படுவதா? என்று வேடிக்கைபேசினர். வகுப்புவாதம், மிகமிகக் கேவலமான பேச்சு, அநாகரீகமுறை என்று எச்சரித்தனர். அறிவாளிகள் இந்தப் பேச்சையே எடுக்கமாட்டார்களே, இது கேவலம் பதவிக்காகக் கிளப்பப்பட்ட பத்தாம் பசலிப்பேச்சல்லவா, என்று கூறினர். சிலர் மிரட்டினர்—வகுப்புக்கிலேசம் மூட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, கூண்டுக்குள் தள்ளப்படுவீர், என்று. நாம் பயமோ, கவலையோ கொள்ளாமல், நமது மனதுக்குச் சரி என்றுபட்டதைக் கூறிவந்தோம். ஒன்பது ஆண்டுகளுக்குப்பிறகு, நாம் சொன்னது தான 'சரி' என்று நண்பர்கள்—எதிர் முகாமில் வீற்றிருந்தவர்கள்—கூறக் கேட்கும்போது, உள்ளபடியே பெருமையும் பூரிப்பும் அடைகிறோம்.

தினசரி காரியாலயத்திலிருந்து வெளியிடப்படும் காண்டீபம் எனும் வாரமடலில்:—

"வகுப்புவாதத்தைஎப்படிப்போக்குவது என்றால், வகுப்புவாத சபைகளைமட்டும் கலைத்தால் போதாது. வகுப்புவாதிகளின் மனோபாவத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

# உள்ள உரம் படைத்தோர்

## கடமை

—:(6):—

அவர் ஏற்றி வைத்த அறிவுத் தீபம் நமது வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி. மனஇருளை ஓட்டும் மணிவிளக்கை, அந்த மதிவாணர் நமக்கு அளித்தார்.

அவருடைய ஆராய்ச்சி மனப்போக்கும், அறிவாற்றலும், மக்களைத் திருத்தியாக வேண்டுமென்ற ஆர்வமும், கண்டோர் வியக்கும் விதத்தது. ஜாதிச்சனியனை, பேதப்பிடையை, மூடப் பழக்க வழக்கங்களை, ஒழிக்க, அவர் அரும்பாடு பட்டார்—கேலி செய்தனர் பலர், அவர் மனம் உடையவில்லை. எதிர்த்தனர் பலர், அவர்பணிய மறுத்தார், தொல்லைகள் விளைந்தன, அவர் துவண்டுவிடவில்லை, மக்கள், மனதிலே, சுலபத்திலே புதுக்கருத்துகள் பதியவில்லை, அவர் சளிப்படையவில்லை—அஞ்சா நெஞ்சினரான அந்த அறப்போர் வீரர், தன் கொள்கை வெற்றி பெற்றே தீரும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைத் துணைகொண்டு சமுதாயத்திலே, ஊறிப் போயிருந்த முறைகளை எதிர்த்து வந்தார்—கடைசிவரை—அந்த முறைகள் முறியத் தொடங்கியதைக் கண்டு களித்தார்.

முறைத்துப் பார்த்த முப்புரியினரைநோக்கி, "எப்புரியிலும் காணப்படாத இந்த முப்புரியினர், ஏன், தங்கள் மந்திர சக்தியினால், என்னை மாடாகவோ, மரமாகவோ, மாறிப் போகும்படி சபித்துவிடக்கூடாது! மாபாவியின் மண்டை ஆயிரம் சுக்கலாகக் கடவது என்றோர் சாபமிடுவதுதானே—முடிந்தால்! "—என்று கேட்டுக் கேலி செய்தார்.

வெகுண்டனர் வைதிகர்கள்—இந்த விதண்டாவாதிக்கு விநாசகாலம் கிட்டிவிட்டது—பார்—பார்—இவன்படப்போகும் பாட்டினைப் பார்—என்று முணுமுணுத்தனர்—அவர் அவர்களின்; கோபத்தைக் கண்டு எள்ளிநகையாடினார்.

ஏதும் செய்ய முடியாததால் ஏசிப் பார்க்கிறார்கள்—என்று கூறினார். எத்தர்களுக்கு, மதப்பித்தர்களுக்கு, பூஜாரிக் கூட்டத்தினருக்கு, அவர், ஓர் ஆச்சரியக் குறியாகக் காட்சி தந்தார் துவக்கத்தில், பிறகுகேள்விக் குறியானார், பிறகோ ஓர் அபாய அறிவிப்புமானார்.

இதோ, தீர்ந்தது இவருடைய கூச்சல்! ஓய்ந்துவிடுவார், தேய்ந்து போகும் அவருடைய எண்ணங்கள்!—என்று கூறிப்பார்த்தனர், பழமை விரும்பிகள்.

அவருடைய வேலை, ஓயவில்லை, ஆர்வம் துவளவில்லை, நாளாகவாக எதிர்ப்பு வலுக்க வலுக்க, அவருடைய பிரசாரம், அதனைவிட அதிக அளவில், வலுவடையவும், பரவவும் தொடங்கிற்று—பாமரர் முதலில் பயந்தனர், பாபாத்மாவோ என்று சந்தேகித்தனர், பிறகோ அவர்கள் வைதிகர்களைக் கண்டால் கேலியே செய்யத் தொடங்கினர்.

"ஏண்டா பாண்டு! உன் தகப்பனாரின் சிரார்த்த காரியமாக என்ன ஏற்பாடு :செய்தாய்?" என்று, பரம்பரை பரம்பரையாகக் கேட்ட பழக்கத்திலே, வைதிகர், கேட்பார்; விளக்கம் பெறாத நிலையிலேயேதான் பாமரன் இருக்கிறான் என்று எண்ணிக்கொண்டு; விதண்டாவாதக்காரன் பேச்சை, பாமரன், நம்பமாட்டான், என்ற நம்பிக்கையில்! ஆனால் பாமரன், கொடுக்கும் பதிலோ, பஞ்சாங்கக்காரரைப் பதைபதைக்கச் செய்வதாக இருக்கும்.

"தகப்பனாரின் திதியா? இதுவரை செய்தது கண்டு என் தகப்பனார் திருப்திப்பட்டதாக ஒரு தகவலும் எனக்குக் கிடைக்கவில்லையே, இனியும் ஏன் திதி செய்வது!" என்று 'பாமரன்' கூறுவான், பதறுவார் பஞ்சாங்கந்தூக்கி.' பாபி! நீசா!—என்று திட்டத்தோன்றும்—ஆனால் தைரியம் பிறக்காது—ஒருமுறை கோபமாகப் பார்த்துவிட்டு, பெருமூச்செறிந்து, "காலம் கெட்டு விட்டது! அந்தக் கிழவனின் பேச்சிலே மயங்கி மதத்தை மறந்து விட்டான் மாபாவி!" என்று முணுமுணுத்துக் கொண்டே போய்விடுவார்.—பாமரனின் கேலிச் சிரிப்பு, அவரைத் துரத்தும்! "போகுது பார், பரலோகத் தபால்பெட்டி!"—என்று கூறிச் சிரிப்பான். விளக்கம் பெற்றாலும் சற்றுக் கோழை உள்ளம் கொண்டவன், "வேண்டாமடா தம்பி! பெரிய ஜாதியைப் பழிக்காதே" என்பார்—உடனே, விளக்கம் பெற்றவன், "ஏமாளி! அந்த எத்தரின் வாழ்வின் சூதை விளக்கினால், என்ன கேடு வந்துவிடும்! நாக்கு அழுகிவிடுமா! நாள்தவறாமல், இந்தப் புரட்டர்களின் யோக்யதையை அலசி அலசி அம்பலமாக்கி, அவர்களுடைய நாலு வேதத்தை நாறடித்து, புராணப்புளுகுகளைப் பொசுக்கி, இதிகாசங்களை இடித்துப் பொடியாக்கி வருகிற பெரியவரை, இந்த 'படேஜாதி'யினர், என்ன செய்ய முடிந்தது—இவர்களுடைய மந்திரபலம் என்ன சாதித்தது!" என்று கேட்டுவிட்டுச் சிரிப்பான். கோழையின் உள்ளத்திலேயும் ஓர் புதுத்தைரியம் பிறக்கும்.

விதவையின் கண்ணீரைக் கண்டால், முதியவர்கள் பயப்படத் தொடங்கினர்—முன்பெல்லாம், கவலை மட்டுமே பிறக்கும்—முதியவரின் பிரசாரம், அவர்களுக்குப்பயத்தைஉண்டாக்கி விட்டது. தாலியை இழந்து விட்டோம், என்று தலைமுறை தலைமுறையாக எண்ணிக்கொண்டிருந்த மக்களிடையே, இந்த அஞ்சா நெஞ்சர், விதவைக்கும் வாழ்வு உண்டு! மறுமண உரிமை உண்டு! இதனை மறுப்பவர் இருவகையினர், மந்தமதியினர், சுயநலமிகள் எனும் இருசாரார் என்றெல்லாம் பேசினார். புதிய தத்துவத்தைப் பரப்பினார்—கண்ணீரைத் துடைத்துக் கொண்டு காரிகையர், அந்தக் கருத்தைக் கவனிக்கலாயினர்— கண்ணீரைப் பொழிந்து வந்த அந்தக் கண்கள், பிறகு, கேள்விச் சரங்களை விடலாயின! வைதிகர் பயந்துவிட்டனர்! விசாரப்படும் விதவைகளையே அவர்கள் அதுவரை பார்த்திருந்தனர். இது புதிய காட்சியாக இருந்தது—கேள்வி கேட்கும் விதவையர்!!

இந்துமதத்தின் ஊழல்களை அச்சம் தயை தாட்சணியமின்றி எடுத்துக்காட்டி, பாமரர், பூதேவர்களென்று பார்ப்பனரைக் கொண்டா

டிய போக்கைப் பலமாகக் கண்டித்து, பலப்பலகாலமாகப் புனிதமானவை, இகபர சுகத்துக்குச் சாதனங்களாக அமைந்தவைகள், என்று கருதப்பட்டு வந்த பழக்க வழக்கங்களைப் பலமாகத் தாக்கி, அவைகளால், நேரிடும் நாசத்தை விளக்கி, பகுத்தறிவைப் பரப்பினார்.

இந்துமதத் தலைவர்கள் கண்டித்தனர்! பார்ப்பனத் தலைவர்கள் பயம் காட்டினர்! தேசியத்தலைவர்கள் இது என்ன வீண்வேலை என்று கேலி பேசினர். அவர், சளைக்கவில்லை, சாடினார் சாடினார், பலம் கொண்ட மட்டும், பழமை, பலமிழந்து போகும் வரையில்.

அவருடைய பிரசாரத்துக்குத் துணை, ஒரு சிறு வாலிபப்படை!

அவருடைய எதிரிகளோ இலட்சாதிகாரிகள், சிரோமணிகள், தர்மகர்த்தாக்கள், மடாதிபதிகள்,!

வீட்டைக் கொளுத்துவோம்—விடிவதற்குள் பிணமாவாய்—விநாசகாலம் வருகிறது—பல வகையான மிரட்டல். அவர் அஞ்சினாரில்லை—அவருக்குத் துணை நின்ற அறிவுப் படையின் வளர்ச்சி, இதனால் அதிகரித்தது!

பண்டிதரின் போக்கு, நடை, பாமரரின் குருட்டறிவு, பணம் படைத்தோரின் பாசாங்குப் பக்தி, மதவாதிகளின் மன இருள், ஆகியவற்றைக், கண்டித்துப்பேசியும், எழுதியும் வந்தார்—வெற்றி அவரை நாடி வந்தது—வீரர் கோட்டம் அமைக்கப்பட்டது—வெள்ளி முளைத்தது!—

பகவான் காப்பாற்றுவார்! —என்ற பழைய பஜனை ஒருபுறம்.

பரங்கியை விரட்டவேண்டும், அப்போதுதான் நமது கஷ்டமெல்லாம், சூரியனைக்கண்ட பனிபோலாகும்—என்ற பரணி மற்றோர் புறம்.

ஒரு புறத்திலே, நாமதாரிகள், நீறுபூசிகள், நிகண்டுதுக்கிகள்.

மற்றோர்புறமோகாந்திக்குல்லாய்க்காரர்!

ஒருபுறம் தோத்திரம்! மற்றோர் புறம் ஆத்திரம்! இடையே இந்த மாவீரர், அவருக்குத் துணையாக ஓர் அறிவுப்படை!

நாடு விடுதலை பெறவேண்டும்—தேசபக்தன் கூறினான்.

நாதன் நாமத்தைப் பஜிப்போம்—மதவாதி ஓதினான்.

நாம் சிந்திப்போம்!

என்றார், அறப்போர் வீரர்!

வெட்டிப் பேச்சு! விதண்டாவாதம்! தேசத்துரோகம்! மதத்துரோகம்! மகாபாபம்! — என்று பலப்பல கூறிப்பழித்தனர், அன்று! இன்று?

முதலமைச்சர் ஓமந்தூரார், அமைச்சர் காளா வெங்கடராவ், அறிஞர் சி. ஆர். ரெட்டி, திரு. வி. கலியாணசுந்தரனார், அறநெறி கூறிடும் ராஜமன்னார், ஆகியோர், அவருடைய பகுத்தறிவுத்திறனை, சிந்தனைச்செல்வத்தை, சீர்திருத்த ஆர்வத்தை, புரட்சிமனப்போக்கை, முற்போக்குத்திட்டத்தை, பாராட்டுகின்றனர். அவரால், நாடு பெற்ற நன்மைகளை எடுத்துக்கூறுகின்றனர். அவர் போல்வார், நாட்டிலே அடிக்கடி தோன்றுவது அரிது என்று புகழ்கின்றனர்.

பத்திரிகைகள் அவருடைய புகழைப்பற்றி எழுதப் போட்டியிட்டுக் கொண்டு முன்வருகின்றன!

'இந்து' பத்திரிகை, தலையங்கம் தீட்டிப்பாராட்டுகிறது.

'ரேடியோ' அவர் புகழைப்பரப்புகிறது. வெற்றிவீரர்! விவேகி! —என்ற விருதுகள் சூட்டப்படுகிறது-விழாக் கொண்டாடப்படுகிறது-சமூகத்துக்கு அவரால் விளைந்த நன்மைகளைத்தொகுத்துக்காட்டப்படுகிறது.

ஜாதிபேதத்தை ஒழித்தார்
மதப்புரட்டரின்கொட்டத்தை
அடக்கினார்
விதவைக்கு வாழ்வளித்தார்
மூடநம்பிக்கைகளை முறியடித்
தார்
அறிவுக்கு உயர்வு தந்தார்.

என்று, அவருடைய வெற்றியை விளக்கி அவருடைய வீரச்செயல்களை வியந்து பேசுகின்றனர்.

நாட்டுக்கு விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்திலே ஈடுபட்டு, சமுகத்தை அனைவரும் மறந்தேபோயினர்—இந்த மாவீரர் மட்டுமே, சமுக சீர்திருத்தத்தைமுன்னணியில் நிறுத்திப் பணியாற்றினார் — என்று ஒரு பிரமுகர் புகழ்கிறார்.

ஜாதிவெறி குறைந்து, மதப்புரட்டு மங்கி, கலப்புமணம் பரவி, விதவைக்கு மறுமணம் என்பது சாதாரண சம்பவமாகி, சமுகத்தில் புதியதோர் நிலை, எண்ணத்தில் ஓர் எழுச்சி, இன்று காணப்படுகிறது என்றால், காரணம் என்ன? அவருடைய அரும்பணி!!—என்று விளக்க உரைகள், பிரமுகர்களால் தரப்படுகின்றன.

பல்வேறு அரசியல் கட்சியினரும் கட்சிகளில் ஈடுபடாமல் வேறு துறைகளில் உள்ளவர்களும், ஒரு சேரக்கூடி அவருடைய அஞ்சாநெஞ்சின் திறனைப் பாராட்டி, நாட்டிலே ஓர் புதிய சகாப்தத்தை அவர் ஏற்படுத்தினார் என்று கூறுகின்றனர்.

இழித்தும் பழித்தும் யாரைப் பேசினார்களோ, யாரை எதிர்த்தனரோ, யாருடைய பணி, பயனற்றதுஎன்று தூஷித்தனரோ, அவரை அவருடைய தொண்டுகளை, இன்று மனமாரப்பாராட்டுவதுடன், மக்கள் முன்பு, அவருக்குத்தமது வணக்கத்தையும் செலுத்துகின்றனர்.

* * *

"ஓமந்தூராரா, பாராட்டினார்? ராஜமன்னாரா புகழ்ந்து பேசினார்? காளாவா கனிவுரை கூறினார்! நம்ப முடியவில்லையே! 'இந்து' தலையங்கம் தீட்டிற்று, திருப்புகழ் பாடிற்று என்று கூறுகிறாயே, தூக்கிவாரிப் போடுகிறதே! உண்மையிலேயா, இவை நடைபெற்றன! எப்போது? எங்கே?"—என்று தோழர்கள் துடிதுடிப்புடன் கேட்பர்— சீர்திருத்தச் செம்மலை இங்குள்ள பெரும் தலைவர்கள், பழிப்பதையே பெருநெறியெனக் கொண்டுள்ளனரே, அப்படிப்பட்டவர்கள், எப்படித், திடீரென்று பகுத்தறிவுப் படைத்தலைவரைப் பாராட்டும் பண்பு பெற்றுவிட்டனர், என்று கேட்கத்தான் தோன்றும்.

அவர்கள் பாராட்டியதும் உண்மை, நண்பர்களுக்கு ஏற்படும் துடிதுடிப்புக்கும் உண்மையான காரணம் இருக்கிறது.

ஜாதிக்கொடுமையை, மதத்தின் பெயரால்நிலவும்மடைமையை, மூடப் பழக்க வழக்கத்தை, கண்டித்து, சண்டமாருதப் பிரசாரத்தைச் சளைக்காமல் நடத்திக்கொண்டு, வைதிகர்களும் தேசிய வாதிகளும் தாக்குவதைப் பொருட்படுத்தாமல், அஞ்சாநெஞ்சுடன், அறிவினைப் பரப்பும் அரும்பணியை ஆற்றும் அறப்போர் வீரனை, இந்துவும் ராஜமன்னாரும், பாராட்டுவர், என்று நமது தோழர்களால் நம்பமுடியாது. எனவேதான் அவர்கள், உண்மையாகவே, இவ்விதம் சீர்திருத்த வீரரைப் பாராட்டினர், என்று நாம்

(18-ம் பக்கம் பார்க்க)

## கனபாடி கவசத்தைக் காண்டீபம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

யும் மாற்றவேண்டும். மனோபாவத்தை மாற்றுவது எப்படி என்று கேட்கலாம். உதாரணமாகத் தமிழ் நாட்டை எடுத்துக் கொள்ளுவோம். இங்கு ஹிந்து முஸ்லிம் என்ற வகுப்பு உணர்ச்சி வடநாட்டில்இருப்பதுபோல அதிர்ஷ்டவசமாகஇல்லை. ஆனால் பிராம்மணர் பிராம்மணரல்லாதார் என்ற உணர்ச்சி இருக்கிறது. இந்த உணர்ச்சி தான் வகுப்புவாதத்தில் கொண்டுபோய்விடுகிறது. இந்த உணர்ச்சிபிறக்க என்ன காரணமென்பதைப் பார்க்க வேண்டும். மைனாரிட்டியான பிராம்மணவகுப்பார் எல்லாத் துறையிலும் ஆதிக்கம் கொண்டிருந்தார்கள். இந்த ஆதிக்கம் நாளாவட்டத்தில் ஏக போகமாக ஆகிவிட்டது. ஏகபோகமாக ஆனதற்குச்சந்தர்ப்பவிசேஷம் தான் காரணம். இதைக்கண்ட பெரும்பாலான பிராம்மணரல்லாதார் கிளர்ச்சி செய்து, ஜஸ்டிஸ் கட்சி என்று ஏற்படுத்தினார்கள். இந்தக் கட்சி சர்க்காருக்குள் நுழைந்ததும் ஜரிகைத் தலைப்பாகைக் கட்சியாகிப், பின்னர் செத்து விட்டது. ஆனால் பிராம்மணர், பிராம்மணரல்லாதார் இயக்கம் மட்டும் வலு குறைந்திருந்தாலும் சாகவில்லை. ஏன் சாகவில்லை என்றால் இரு தரப்பிலும் விட்டுக் கொடுக்கும் உணர்ச்சி ஏற்படவில்லை என்பது தான் காரணம்.

யாருக்கு யார் விட்டுக்கொடுப்பது என்று கேட்கலாம். ஆதிக்கம் யாருக்கு உண்டோ அவர்கள் தான் விட்டுக் கொடுக்கவேண்டும். இது தான் உலக இயல்பு. இந்தக்கருத்தில் தான் உத்யோக நியமன விஷயத்திலும் கல்வி விஷயத்திலும் சென்னை சர்க்கார் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்தினார்கள். அதாவது பதவிகளிலும் கல்விவசதியிலும் ஒரு வகுப்பாருக்கு மட்டும் ஏகபோகம் இருக்கக்கூடாது என்று வகுப்புவாரியாகப் பிரித்து விட்டார்கள். இந்தமுறை நெடுங்காலமாக இருந்துவருகிறது. ராஜாஜி பிரதமராக இருக்கும்போது இந்த முறையை ஒழிக்க வேண்டுமென்றும், காங்கிரஸ் கொள்கைக்கு இது புறம்பானதெனவும் கூறப்பட்டது. அப்பொழுது ராஜாஜி, அவ்வளவு சுலபத்தில் இதை ஒழிக்க முடியாது என்று எச்சரித்தார். அதோடு அக்கிளர்ச்சி அடங்கியது. காலஞ்சென்ற ஸ்ரீனிவாச அய்யங்கார் கூட இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை ஆதரித்தார். அவர் இன்னும் ஒருபடி அதிகமாகக்கூடப்போனார். பிராம்மணர்கள் வேலைக்குப்போகாமல் இருந்தால் வகுப்புவாதமே ஒழிந்துவிடுமென்றார். இப்படியாக அடங்கின கிளர்ச்சி இப்பொழுது திரும்பவும் ஆரம்பமாகியிருக்கிறது. மகா தேசியம் பேசும் 'ஹிந்து'ப் பத்திரிகை இந்தக் கிளர்ச்சிக்கு தீவட்டி பிடித்துக் கொண்டு முன்னால் நிற்கிறது. கல்வியில் கூட வகுப்புவாதமா என்று "வாசக அன்பர்கள்" வரைந்து தள்ளும் கடிதங்களை அழகு அழகாக எடுத்துப் பிரசுரிக்கிறது.

கல்லூரிகளில் எதற்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறார்களென்பதைப் பெருச்சாளி 'ஹிந்து' அறியாமலிருப்பதாக நாம் நினைக்கவில்லை. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வருவதற்கு முன்னால் படித்த மாணுக்கர்களில்எத்தனைபேர் பிராம்மணர்கள்—எத்தனை பேர் பிராம்மணல்லாத மக்கள் என்பதை எடுத்துப்பார்க்கட்டும். இந்த முறையினால் கீழான நிலையிலுள்ள ஜாதியினர் முன்னுக்கு வரவில்லையா? இந்த மக்கள் ஜனத்தொகையில் பிராம்மணர்களை விட மெஜாரிட்டியல்லவா? "ஹிந்து" தர்மப்படிப் பார்த்தால் இந்த மெஜாரிட்டி மக்கள் கீழேயே இருக்க வேண்டும் என்பது அர்த்தமா? அப்படி இருந்தால் நாடு செழித்திருக்க முடியுமா? மடையன் கூட முடியுமென்று சொல்லமாட்டான்.

'ஹிந்து' இந்த வாதத்தை ஏற்கவில்லை. மாறாகத் திறமை உள்ளவர்களுக்கு, கல்தாவாஎன்று கேட்கிறது. திறமை இன்னாருக்குதான் உண்டு, இன்னாருக்கு வராது என்று பேசுவது மகா அயோக்கியத்தனமாகும். சந்தர்ப்பங்கள் அனைவருக்கும் சமமாக இருந்தால் எல்லோரும் திறமை சாலிகள்தான். இதில் இன்ன ஜாதி தான் திறமை வாய்ந்தது என்று சொல்லுவது தப்பு. ஒரு வகுப்பாரைக் கீழேயே வைத்திருந்தால் அந்த வகுப்புநடைமாடு மாதிரிதான் இருக்கும். அதேசமயத்தில் இன்னொரு வகுப்பை உச்சாணிக்கோப்பில் தூக்கிவைத்தால், அந்த வகுப்புத் தடுக்கிவிழுவதுகூட ஒரு வித்தையாகத்தான் தோன்றும். ஆகவே "திறமை" என்முகத்துவது எல்லாம் பச்சை வகுப்புவாதத்தை திரைபோட்டு மறைப்பதாகும்.

இன்னொரு விஷயத்தைக் கூறினால் வாசகர்கள் திடுக்கிடுவார்கள். திறமை என்றும் வகுப்புவாதமற்ற தேசியமெனவும் கதைக்கும் இந்த தேசபக்தர்கள் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். இவர்கள் தங்கள் காரியாலயங்களில் நியமிக்கும் ஆட்களைப் பார்த்தால் இதென்னஓமகுண்டம் வளர்க்கும் சாவடியா அல்லது முற்போக்கானகாரியாலயமா என்று தோன்றும். தங்கள் ஜாதியைச் சேர்ந்த—குலப்பிரிவைச் சேர்ந்தவர்களைத்தான் நியமிப்பார்கள். பென்ஸிலுக்கும் கட்டிடச் சுண்ணும்புக்கும் ஜாதி என்று இருந்தால், அதிலும் வடகலை தென்கலை என்ற பிரிவும் இருந்தால் சொந்தக்கலை பென்சிலையும் சொந்தக்கலை சுண்ணும்பையும் தான் வாங்குவார்கள். ஏன் என்று கேட்கிறீர்களா? அது சொந்த விஷயம் என்று கூறுவார்கள். "என் கொள்கையைத் தாக்கு—ஆனால் என்னைத்தாக்காதே" என்பார்கள். இந்த நபர்களை வைத்துத்தான் அவர்கள் கொள்கையே உருவாகிறது. இவர்கள் மனப்போக்கின்படிதான் பேசுகிறார்கள்— எழுதுகிறார்கள். ஆகவே இவர்கள்—இவர்கள் மனோபாவம் இரண்டும் சேர்ந்துதான் இவர்கள் கொள்கை என்றாகிறது. பிரிக்க முடியாத இந்த இனங்களை எப்படிப்பிரிக்க முடியும்?

மேலும் இந்தச் சத்புத்திரர்கள் பேசுகிறபடியே நடக்கிறார்களா என்று பார்த்தால் அதுவுமில்லை. ஜாதிப்பிரிவினை கூடாது என்கிறார்கள். ஆனால் இன்ன ஜாதிதான் மேலே வரவேண்டுமென்று வேலை செய்கிறார்கள். இதைப் பச்சையாகக் கூறினால் அதுப்பே இல்லை. ஆனால் அப்படிக்கூறுகிறார்களா? இல்லை.செவ்வாய் கிரகத்திலுள்ள மக்களுக்கும் தங்களுக்கும் சொந்தம் என்று சர்வலோக—கிரக—தேசியம் பேசுகிறார்கள். செய்வதோ ஜின்னு மாடலில் இருக்கிறது.

எனவே இந்த வகுப்புவாத மனப்பான்மை கூடவே கூடாது. இது தேசத்துக்கே ஆபத்து இது எந்த வகுப்பாரிடம் இருந்தாலும் சரியே, அதை ஒழிக்கவேண்டும். பார்லிமென்ட் நிறைவேற்றியிருக்கும் சட்டத்தைக் கண்டாவது "திறமை— சாவ தேசியம்" என்று

பொய்க் கூச்சல் போடும் இந்த வேஷதாரிகள் தங்கள் மனப் போக்கைத் திருத்திக்கொள்வார்களாக. தங்கள் காரியாலயத்தை நாடி வருகிறவர்களை எந்தக்கலை—எச்சில் கலையா எருக்கலையா என்று கேட்காமல் நடப்பார்களாக.”

என்று 16—4—48 இதழில், ஓர் கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது.

பிராமணனைப் பார்த்து, பொறுமைப்பட்டு என்ன பயன்? புலியைப் பார்த்து பூனைசூடுபோட்டுக் கொள்வது போலிருக்கு. அந்த வகுப்பார், புத்தி தீட்சணியம் என்ன, எவ்வளவு சுறுசுறுப்பு, எவ்வளவு சிரமப்பட்டு, அக்கரையோடு படித்து முன்னுக்குவருகிறார்கள்! அது போலப் படிக்கும் திறமை இல்லாவிட்டால், எங்காவது போய் மூட்டை சுமக்க வேண்டியதுதான், வண்டியோட்ட வேண்டியதுதான்—பார்ப்பான் முன்னுக்குவந்து விட்டான் என்றுகூவிப் பயன் என்ன? வீண்துவேஷந்தானே அது! கையாலாகாதவன் கதறல்! வெட்கமில்லையா உனக்கு! என்று கேலிபேசிக்கண்டித்து வந்த காலம் போய்விட்டது. ஒன்பதாண்டுகளுக்குப்பிறகு, நமதுகொள்கை, அவர்கள் உள்ளத்திலே தங்கத்தொடங்கிற்று.

பார்ப்பனர்கள், புத்தி சாதுர்யத்தாலோ, அபாரமான உழைப்பினாலோ, உயர்ந்துவிடவில்லை, சந்தர்ப்பவிசேஷமே இதற்குக் காரணம், என்று காண்டீபம் எழுதுகிறது.

“என்னய்யா இது, எந்த உத்யோகத்திலும், பார்ப்பனரே, பெருவாரியாக இருக்கிறார்களே; சரியா! நூற்றுக்கு மூன்றுபேர் எனும் அளவுள்ள ஒரு சமுகம், இப்படி ஏக போகம் அனுபவித்தால், பெரிய சமுகத்தின்கதி என்னாவது? என்று கேட்டபோது, மூக்குச்சிவந்துபோய், மீசைதுடிதுடித்து, உடலே படபடத்து, என்ன பேசினார்கள் தெரியுமோ? “திறமை, உள்ளவர்கள், மேல் உத்யோகத்துக்கும், பெரிய உத்யோகத்துக்கும் போகிறார்கள். அதற்காக நீ, வயிற்றெரிச்சல்பட்டு என்ன பலன்? திறமை உள்ளவர்களைப் பெரிய உத்யோகத்தில் வைத்தால் தானே நிர்வாகம் நல்லமுறையில் இருக்கும்.” என்று வாதாடினர்.

காண்டீபம் துளைக்கும் வேடிக்கையைக் கவனியுங்கள்.

“திறமை இன்னாருக்குத்தான் உண்டு, இன்னாருக்கு வராது என்று பேசுவது மகா அயோக்யத்தனம்.”

“‘திறமை’ என்று கத்துவது எல்லாம் பச்சை வகுப்புவாதத்தைத் திரை போட்டு மறைப்பதாகும்.”

காண்டீபம், குறி பார்த்துப் பாய ஒன்பதாண்டுகள் ஆயினவென்ற போதிலும், துளைக்கும் சக்தி, அபாரமாகவே இருக்கிறது. ஆயுதமும் புதிது, ஆர்வமும் புதிது!!

‘இந்து’ தீவட்டி பிடிக்கிறது.
‘இந்து’ பெருச்சாளி.
ஆபீசுகள் ஓமகுண்டம்
போலுள்ளன.
வேஷதாரிகளின் பொய்க்
கூச்சல்.

இப்படிப்பட்ட காரசாரமான பதப்பிரயோகங்கள் ஏராளம். ஒன்பதாண்டுகள் பொறுமையை இழக்காமல், இருந்தது வீண் போகவில்லை. ஏளனம் செய்யப்பட்ட கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது! கண்டித்துவந்தவர்கள், அந்தக் கொள்கைக்குக் காப்பளிக்க உறுதி பூண்டுவிட்டனர். புதிய பலம் கிடைத்திருக்கிறது, பலகாலமாக, நாம் ஊராருக்குக் கூறிவந்த உண்மைக்கு.

✲

---

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[18—4—48 தொடர்ச்சி]

“சுக்லாம்பரதரம்” என்று நான் பழி தீர்க்கும் படலத்தைத் துவக்கினேன். கணபதி சாஸ்திரிகள் என் கருவியானார். அவருக்கு இஷ்டசித்தி விநாயகர் பணம் தந்தார்! கணபதி சாஸ்திரி, என்னிடம் கொண்ட பிரேமைக்கு அளவு கிடையாது. நான் அவரைப்பற்றி அவவப்போது காட்டிய அலட்சியங்களுக்கும் அளவு கிடையாது.

அவர் வீட்டுக்குவரும் நேரத்தில் நான் வெளியே புறப்படுவேன். குறுக்கே அவர்பேசக்கூடாது. கூடவும் வரக்கூடாது. நான் திரும்பிவரும் வரையில் கணபதிசாஸ்திரி காத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். அப்படித்தான் இருப்பார். வரவில்லையே, வரவில்லையே என்று அந்த வயோதிகர் காத்துக்கொண்டிருக்கக் காணும் நான், “படு! படு! ஆண் உலகமே படு! எத்தனையோ பெண்களை எவ்வளவோ ஆண்கள் மனம்நோகச் செய்கிறார்கள் அல்லவா? எத்தனை குடும்பத்திலே குத்து, வெட்டு, உதை, கோணற்கூத்துக்கள், ஆண்களால் நடக்கின்றன. எவ்வளவு குடும்பங்களிலே ஆடவன், பெண்ணை அடிமையாகக் கொண்டு ஆட்டிப் படைக்கிறான். அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு ஏன்? என்கிறான். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன் என்று போதித்து விட்டுக், கல்லைவிடக்கடினமான மனதுடன் பெண்ணை நடத்துகிறான். அவர்களை அப்பாடு படுத்தும் ஆண்கள் கூட்டத்தைச் சேர்ந்த சாஸ்திரிகளே, தெரிகிறதா பழி தீர்க்கும் போது, படு!” என்று நான் மனதிற்குள் கூறிக்கொள்வேன். டாக்டரே, இப்படியும் நான் இருந்திருப்பேனா, இருதயமே கிடையாதா என்று யோசிப்பீர் உமமைப்போலவே பலரும் யோசிப்பார்கள். ஆம்! நான் பெண் பேயானேன். பேய் பயங்கர ரூபம் என்று கூறுவார்கள். அதுவல்ல நான். பிரேமையை ஊட்டி ஆணை அடக்கி ஆட்டிப்படைக்கும் அழகுள்ள பேயானேன். என் முதல் பலி கணபதி! இரண்டொரு மாதங்களில் கணபதி சாஸ்திரிகள் என் ஏவ

லாளியானன். துப்பாக்கிக்குத் தோட்டா இல்லையானல் தூரத்தானே எறிவார்கள்? கணபதி சாஸ்திரிகளிடமும் காசு இல்லை. எனவே நான் கடுகடுத்தேன், சாஸ்திரிகள் கெஞ்சினர், "நான் கையில் பணமில்லாது கலவிசெய்ய வந்தீரோ, கடனுனுல் எழுந்து போம் சாமி!" என்றேன். கணபதி சாஸ்திரிகள் அவ்வளவு எளிதிலே போவாரா? வேலை கொடுத்தால் தானே போவார் வெளியே. அந்தச் சமயத்தில்தான் அவருக்குச் சரியான வேலை கொடுத்தேன். ஜெமீன்தாரரை சரிபடுத்தவாவது வேண்டும், அல்லது அவருக்குத் தொல்லையாவது கொடுக்க வேண்டும். அதற்கோர் வழிசொல்லு என்றேன்.

இஷ்டசித்தி விநாயக பூஜையில் கைதேர்ந்த கணபதி சாஸ்திரிகள் ஓர் யுக்தி சொன்னர். ஜெமீன்தாரரின் மகளுக்குக் கலியாணம் நிச்சயமாகி வருவதாகவும், மிகப் பெரிய இடமென்றும், ஒரேபிள்ளை என்றும், அந்த இடத்துச் சம்பந்தத்திற்காக ஜெமீன்தார் வெகு பாடுபட்டு வருகிறார் என்றும், இந்த நேரத்தில் கமலாவை விட்டு ஜெமீன்தார் மீது கேஸ் தொடுப்பதாக வக்கீல் நோட்டீசு கொடுத்து விட்டால், ஜெமீன்தார் பெட்டியிலிட்ட பாம்பு போல் அடங்கிவிடுவார் என்றும் சாஸ்திரிகள் கூறினர். நான் சந்தோஷத்தால் துள்ளினேன். சாஸ்திரிகள் சொன்னபடி கேஸ் போட்டு மிரட்டவேண்டுமென்றல்ல. ஜெமீன்தாரர் தேடிப் பிடிக்கும் ஆசை மருமகனை என் அடிமையாக்கி, ஜெமீன்தாரரின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று தீர்மானித்தே நான் துள்ளினேன். சாகசம் என்னிடம் இருக்கும்போது, இது சாயாது போகுமா? மேலும் எடுத்த காரியம் விக்கினமாகாதிருக்க, இதோ கணபதி சாஸ்திரி கைவசம் இருக்கிறார். பார்ப்போம் ஒரு கை என்று தீர்மானித்து, எந்த விதத்தில் இதைச் செய்வது என்று யோசித்தேன். இரவு பகல் இதே சிந்தனைதான். நாட்கள் ஆக ஆக மனம் பதற ஆரம்பித்தது. ஜாதகப் பொருத்தம் சரியாக இருப்பதாக, கணபதி சாஸ்திரிகள் சேதிகொண்டு வந்தார். இஷ்ட சித்தி விநாயகருக்கு இலட்சார்ச்சனை செய்துவிட்டார்களாம். இருபதாயிரம் ரூபாய் செலவில் பெண்ணுக்கு நகைகளாம். மாப்பிள்ளையின் குணதிசயமோ மகாப் பிரமாதமாம். நல்ல படிப்பாம். சத்சகவாசமாம். வீண் ஜோலிக்குப் போகாதவராம். வீட்டுக்கு அடங்கிய பிள்ளையாம். இவ்வளவும் கணபதி சாஸ்திரிகள் கண்டறிந்து கூறிய சேதிகளே. இவைகளைக் கேட்கக் கேட்க, நான்கொண்ட உறுதி தளரவில்லை. இப்படிப்பட்டவனைத்தான் எனக்கு இரையாக்கிக் காட்டவேண்டும். இத்தகைய மருகனை அடையப்போகிறோம் என்று எண்ணும் ஜெமீன்தாரரின் மனதில் மண் போடவேண்டும். என் அக்காவின் அழகை விரும்பி, பின்னர் வீண் சந்தேகத்தால் வெறுத்து, எங்களைத் தொல்லை கொடுத்த ஜெமீன்தாரர், என் அழகு, அவரது குடும்பத்தின் குதுகலத்தைக்கொலை செய்தது என்று அறியவேண்டும். அப்போதுதான் பழி தீர்க்கும் வேலை முடிந்ததாக ஆகும் என்று எண்ணினேன். ஜெமீன்தாரரின் மகள் ஜெயலட்சுமியை எனக்கு நன்றாகத் தெரியும். அவள் மட்டும் ஜெமீன்தாரர் வீட்டில் பிறக்காது, சாதாரணக் குடும்பத்திலே பிறந்திருந்தால், ஆயிரம "சொட்டு" சொல்வார்கள். நான் பொறாமையினல் கூறவில்லை. அவளுக்கு மூக்கு சப்பை. கண்கள் சிறிது. நெற்றி மூன்று விரற்கடை கூட இராது, கழுத்தோ குறுகல், நிறமோ அவிந்த நெருப்பு, படிப்போ சூனியம், பாட்டோ கேட்கவேண்டியதில்லை. குணமோ பொல்லாது. பணம் இருக்கிறது பெட்டியிலும் பேழையிலும். அவன் பணத்தையா மணம் செய்துகொள்ளப்போகிறன்! இவளைக் கண்டால், என்ன எண்ணுவான்!

நான் மட்டும் அவனை முதலில் சந்தித்துப் பேசி, கொஞ்சம் பழகச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால், பிறகு ஆசாமி, நான் ஆட்டிவைக்கிறபடி ஆடித்தானே தீரவேண்டும். அழகு அபின் போன்றதுதானே. ஆனல் நான் அவனைச் சந்தித்துப் பழகவேண்டுமே. இதற்குக் கணபதி சாஸ்திரியின் ஒத்தாசை இல்லாது முடியாது. அதிலும் நான் செய்ய எண்ணிய தந்திரத்துக்கு சாஸ்திரி இலேசில் ஒப்புக்கொள்ள மாட்டான். எனவே, என் யோசனை பூர்த்தியானதும், கணபதி சாஸ்திரியை வரங்கேட்டேன். அவன் கொடுத்தேன்! கொடுத்தேன்!! என்று ஆனந்தமாகக் கூறினன்; என்ன வரம் என்றுகூடக் கேட்கவில்லை. என்ன வரம் என்று கேட்டால் நான் கோபித்துக் கொள்வேன் என்பது சாஸ்திரியின் பயம்.

சாஸ்திரிகளிடம் என் யோசனையைக் கூறினேன். முதலிலே சாஸ்திரிக்கு அருவருப்பாக இருந்தது. பிறகு கோபம் வந்தது. மறுபடி பயம் புறப்பட்டது. பின்னர் சந்தேகம் கிளம்பிற்று. ஒவ்வொன்றையும் நான் ஓட்டினேன். பிறகு சாஸ்திரி "ததாஸ்த்து" கூறினன்.

மறுதினம் என் ஏற்பாட்டின்படி, சாஸ்திரி, ஜெமீன்தாரர் வீடு சென்று, நான் சொன்னபடி காரியத்தைச் சாதித்துக்கொண்டு, என்வீடு வந்தார். உள்ளே நுழையும் போதே, "காயா? பழமா?" என்று நான் கேட்டேன். சாஸ்திரி பூணூலை உருவினர். உடனே "பழம்" என்று தெரிந்துகொண்டு "இஷ்ட சித்தி விநாயகர் அங்கே கோயிலில் இருப்பதாகக் கூறுகிறர்களே, விஷயம் தெரியாதவர்கள். இதோ இருக்கிறீரே" என்று கூறிச் சாஸ்திரிகளைக் களிக்கச் செய்தேன். பரிமளப் பாக்குத் தூளும், "ரவேசு" வெற்றிலையும் நைவேத்யமாக வைத்து, விசிறி கொண்டு வீசியபடி, வேதியரைச் சேதி விசாரித்தேன். ஆனந்தத்தைச் சற்று நேரம் அனுபவித்துவிட்டுப் பிறகே கூற முடியும் என்றர் சாஸ்திரி. ஆகவே வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டேன். பிறகு கேட்டேன். "முதலிலே நானென்று கேட்கிறேன் விமலா, உனக்காக நான் இவ்வளவு சிரமப்பட்டுக் காரியத்தைசாதிக்கிறேனே, நீ கடைசியில் என்னை நடுத்தெருவிலே விட்டுவிட்டு, புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துக்கொண்டு போய்விட்டகதைபோல, அந்தப்பயல்பின்னேடே போயிட்டா, என்கதி என்னகும். அதை முதலிலே சொல்லு" என்றர் சாஸ்திரிகள்.

உள்ளபடி நல்ல கேள்விதான். நான் வேறொரு ஆளைப்பிடிக்க, இந்த ஆளையே வேட்டைக்காரனக்கினேன். புது ஆள் கிடைத்ததும் தன் கதி என்னகுமோ என்ற கவலை சாஸ்திரிக்கு இருக்குமல்லவா? பில்வமங்களைச் சிந்தாமணிக்கு அறிமுகப்படுத்திவிட்ட நண்பன், சிந்தாமணியும் பில்வமங்களும் சிருங்கார சாஸ்திர ஆராய்ச்சி செய்யப் போவோம் என்றுரைத்துவிட்டுச்,

(11-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 25—4—48 [ஞாயிறு


## சேர்க்கை வாசனை

*

மாகாண மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் இந்நாட்டு மக்கள் கற்கவேண்டுமென்று, அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்த பண அமைச்சர் தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். மாகாண மொழி கற்கவேண்டுமென்பதற்கு அவர் கூறிய காரணம், மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படும்போது (பிரிக்கப்படவேண்டும்) அந்தந்த மாகாண மொழியை அந்தந்த மாகாணங்களில் இருப்பவர்கள் தங்கள் தாய்மொழியாகக் கொண்டு கற்கவேண்டும் என்பது. இந்தி கற்கவேண்டுமென்பதற்கு அவர் கூறிய காரணம், இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்பது. ஆங்கிலம் கற்பதற்கு அவரால் கூறப்பட்ட காரணம், உலக நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள அது தேவை என்பது.

மாகாண மொழியை, அந்த மாகாணத்தில் இருக்கும் மக்கள் தாய்மொழியாகக் கொண்டு கற்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறியது, மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படும்போது, அந்த மாகாண மொழி அல்லாத வேறு மாகாண மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள், அந்த மாகாணத்தைவிட்டுத் தங்கள் சொந்த மாகாணத்துக்குப் போக முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தால், அத்தகையவர்கள், தங்கள் சொந்த மொழியை விட்டுத், தாங்கள் இருக்கும் மாகாண மொழியையே தாய்மொழியாகக் கொள்ளவேண்டும் என்பதற்காக அவ்விதம் கூறினர் என்று கருதுகிறோம். உதாரணமாக, தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டுவிட்டால், தமிழ் மாகாணத்தில் நெடுங்காலமாக இருந்துவரும் ரெட்டி, நாயுடு போன்ற தெலுங்கு மொழியைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்டவர்கள், தமிழ் மாகாணத்தை விட்டுப் போகமுடியாது. எனவே அவர்களும் தங்கள் தாய் மொழியாகத் தமிழையே கொள்ள வேண்டும். ஆனால் இது அனுபவ சாத்தியமாகுமா? பல்நெடுங்காலமாகவே தமிழ் நாட்டில் இருந்து கொண்டு, தமிழ் மக்களோடு கூடி வாழ்ந்தபோதிலும், தெலுங்கு பேசுகின்ற ரெட்டி, நாயுடு வகுப்பைச் சேர்ந்த மக்கள் தாங்கள் தாய் மொழி (வீட்டு மொழி)யாகத் தெலுங்கையே கொண்டுள்ளார்கள் என்பது கண்கூடு. இந்த நிலையில், தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டாலும் அவர்கள் தங்கள் தாய்மொழியாகத் தெலுங்கையே கொள்வார்களன்றி, ஒருபோதும் தமிழைத் தங்கள் தாய்மொழியாகக் கொள்ளவே மாட்டார்கள்.

எனவேதான், தவிர்க்கமுடியாத பலகாரணங்களால் ஒன்றுபட்டு ஒருமித்து வாழவேண்டியவர்களான, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய ஒரு இனமொழிகளைப் பேசும் மக்களை உள்ளடக்கிய ஒரு நாடு—திராவிடநாடு — தனியாகப் பிரிக்கப்படவேண்டுமென்றுகூறுகின்றோம். அப்போது இத்தகையமொழிப் போராட்டத்துக்கே இடமேற்படாது. தமிழ்நாட்டில் இருக்கும் ரெட்டியாரையோ, நாயுடுவையோ தமிழைத்தான் தாய்மொழியாகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய அவசியம்கூட ஏற்படாது. இதுமட்டுமல்ல; தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியமொழிகளைப் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றாக்கி, ஒரு இனமக்களாக வாழ்வதற்குத், திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்பட்டாக வேண்டுமென்பதற்கு நாம் கூறும் மிகமிக முக்கியமான காரணம், வாழ்க்கையின் உயிர்நாடியான பொருளாதாரத் துறையில் நாம் பிற நாட்டவரால் சுரண்டப்படாமல் இருப்பதற்கு இதைத் தவிர வேறு சிறந்த வழி இல்லை என்பதுமாகும். இதனை உணர மறுப்பவர்கள் உண்மையை உணர மறுப்பவர்களாகும்.

இனி, இந்திமொழியை எல்லாரும் கற்று, அதனையே இந்தியாவின் பொது மொழியாகக் கொள்ள வேண்டுமென்று தோழர் சண்முகம் அவர்கள் கூறுவது, சேர்க்கை வாசனையைப் பொறுத்து அவர்கொண்ட கருத்தாகும். இப்போது அவர் போய்ச் சேர்ந்துள்ள இடம், எப்படியாவது இந்தியை இந்நாட்டுப்பொது மொழியாக்கி விடவேண்டுமென்று பாடுபடுவர்கள் கூடியுள்ள இடமாகும். எனவேதான், ஆங்கிலமே இந்நாட்டுக்கும் பொதுமொழியாக இருக்கக் கூடியது என்று ஒருகாலத்தில் கூறிய தோழர் சண்முகம் அவர்கள் இப்போது, இந்தியை இந்நாட்டுப் பொதுமொழியாகக் கொள்ள வேண்டுமென்று கூறும் சங்கடமான நிலைமைக்கு ஆளாகி இருக்கிறார். இந்தி, இந்நாட்டுப் பொதுமொழியாகக் கற்றுக்கொள்ளப்படவேண்டியது என்று கூறியவரே, உலக நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்காக ஆங்கிலத்தையும் கற்கத்தான் வேண்டுமென்று வற்புறுத்துகிறார். உலக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்வதற்காகக் கற்றுக் கொள்ளும் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டே இந்தியா என்று சொல்லப்படும் இவ்வுபகண்டத்திலுள்ளநிகழ்ச்சிகளையும் அறிந்து கொண்டால் என்ன? இவ்வுபகண்ட நிகழ்ச்சிகளை மட்டும் அறிந்துகொள்ளத் தனியாக ஒரு புதுமொழியைப் பொதுமொழியாக ஏன் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது தெரியவில்லை.

ஆங்கிலேயர் நம்மைவிட்டுப் போனபின்னரும், அவர்களுடைய மொழியான ஆங்கிலம் நம்மை விட்டுப் பிரியமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டுள்ள நாம், அதனையே நம்முடைய பொதுமொழியாகக் கொள்வதில் தவறென்ன? உலகத்தொடர்புக்கு ஆங்கிலம வேண்டுமென்று கூறும்போது, இவ்வுபகண்டத்தையும் உலகத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளாமல், அதனை ஒரு தனி உலகமாக்கி, அதற்கு ஒரு தனிப் பொதுமொழி உண்டாக்க முயலும் புதுவேலை—பிரயாசை எதற்கு? உலகத்தொடர்பிலிருந்து அறுபடமுடியாத நாம், நமக்கென ஒரு புது மொழியைப் பொதுமொழியாகக் கொள்வதைவிட, உலகம் ஒப்புக் கொண்ட பொதுமொழியான ஆங்கிலத்தையே நாமும் நம்முடைய பொது மொழியாக வைத்துக் கொள்ளலாமே!

ஆங்கிலம் கற்கக்கூடாது—அதன் முகதரிசனமே நமக்குக் கூடாது என்ற பதிவிரதா தன்மைக்கு நாம் வந்துவிட்டாலாவது, நமக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்று கூறுவதில்சிறிதளவு பொருளாவதுஇருக்கிறது என்று கருதமுடியும். அப்

போதும்கூட, இந்நாட்டுப் பொது மொழியாவதற்கு இந்தி ஒன்றுதான் ஏற்புடைத்தா என்பது, இந்நாட்டுப் பன்மொழிப் புலவர்கள் அனைவரும் ஒன்றுகூடிப்பேசி முடிவுகாணவேண்டிய விஷயமாகும். அப்பொழுது உலகத்தொடர்புக்கு இந்நாட்டு மொழிகளில் எது ஏற்புடைத்து என்ற பிரச்னை எழும். அந்தப் பிரச்னை எழும்போது மறுபடியும் ஆங்கிலம் தான் நம்கண்முன் காட்சியளிக்கும்.

எனவேதான், உலகத்துக்கும்நமக்கும் (நாமும் உலகத்தின் ஒரு பகுதியினர்தானே) பொதுவாகவுள்ள ஆங்கிலத்தையே பொது மொழியாகக் கொண்டு, இந்தப் பொதுமொழிப் பிரச்னையில் வீண்சச்சரவுகளை உண்டாக்கி, இருக்கும் சிறிதளவு ஒற்றுமைக்கும் ஏன் பிளவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறோம். பல சிக்கலான பிரச்னைகளைத்தீர்க்கவல்ல தோழர் சண்முகம் அவர்கள்,மத்திய சர்க்காருக்கு இந்தப் பிரச்னையையும் விளக்கிக்கூறி, அவர்கள் கொண்டுள்ள பொதுமொழி மயக்கத்தைப் போக்க இனியாவது முயற்சிப்பாரா அல்லது சேர்க்கைவாசனை அவருடைய திறமையைக்கூட மறைத்து விடக்கூடிய முறையில் நடந்துகொள்வாரா என்பது இனிப் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்றாகும்

●

# மறக்க முடியாது!

—★—

தாய், வீட்டில் இருந்தாள். தகப்பன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தான். குழந்தை தனியாக ஓரிடத்தில் நின்றது. குழந்தைக்குப் பசிவந்துவிட்டது. அம்மே! அப்பா' என்று அழத்தொடங்கிற்று. தாய் தந்தையர்க்குக் குழந்தையின் அழுகுரல் கேட்கவில்லை. அவர்கள்தான் கிட்ட இல்லையே! ஆனால், குழந்தைக்கும் அதன் தாய் தந்தையர்க்கும் மற்றும் யாவர்க்கும்—யாவுக்கும் தந்தையாம் சிவனுக்கு மட்டும் குழந்தையின் அழுகுரல் கேட்டது. உடனே, சிவன் உமாதேவியாரைநோக்கி, அழுகின்ற குழந்தைக்கு முலைப்பாலோடு ஞானத்தையும் கலந்து கொடுக்கும்படி கட்டளையிட்டார்.—கொடுக்கப்பட்டது.

* * *

ஒரு பன்றி பன்னிரண்டு குட்டிகளை ஈன்றதும் தாய்ப்பன்றி இறந்துவிட்டது. பன்றிக்குட்டிகள் பாலில்லாது தவித்தன. உடனே பகவான் தாய்ப்பன்றி வடிவத்தில் வந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்தார். பின்னர் அப்பன்றிக்குட்டிகளே பாண்டிய மன்னனுக்கு மந்திரிகளாய் அமர்ந்து வேலை பார்த்தன.

* * *

துரௌபதியின் துகிலைச் துச்சாதனன், பலர் முன்னிலையில் பலவந்தமாக உரிந்தான். கிருஷ்ண பரமாத்மா, திரௌபதையின் துகிலை வளரும்படி செய்து, அந்த அம்மையின் மானத்தைக் காப்பாற்றினார்.

* * *

முதலை வாயில் அகப்பட்டுக் கொண்ட யானை, ஆதிமூலமே என்று அலறிற்று. ஆபத்பாந்தவரும் அனாத ரட்சகருமான ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, யானையின் அபயக்குரல் கேட்டு ஓடி வந்து, முதலை வாயினின்றும் யானையை மீட்டு அதற்கு மோட்சம் கொடுத்தார்.

* * *

அன்பு வடிவினனும் ஆண்டவன், தன்னால் படைக்கப்பட்டஉயிர்களுக்கு ஆபத்து நேருங் காலத்தில், அவைகளைக் காப்பாற்றாது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார் என்பதை மெய்ப்பிப்பதற்காகப் புராண இதிகாசங்களில் கூறப்பட்டிருக்கும் அற்புத நிகழ்ச்சிகளில் சிலவே நாம் மேலே எடுத்துக் காட்டியவை.

ஆண்டவனுடைய அருள் விளையாட்டையும், அன்புப் பெருக்கையும் அளந்து காட்ட மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளே போதுமானவை என்று கருதியதாலேயே சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துக்காட்டினோம். ஆண்டவன் மக்களிடமும் பிற உயிர்களிடமும் கொண்டுள்ள தாய்மைக் குணத்துக்கும், தகைசால் அன்புக்கும் மேற்கோள் எடுத்துக் காட்டுவது, 'கொல்லன் தெருவில் ஊசி விற்பது' போலாகுமே என்று கூறிப், புராண இதிகாச அன்பர்கள் எம்மைக் 'கேலி' செய்தால் என்ன செய்வது என்ற அச்சமுமே, மேற்கோள் காட்டுவதன் அளவைச் சுருக்கும்படி செய்தது.

இனி, ஒரு சிலர், இவை எல்லாம், எல்லாரும் அறிந்த பழங்கதைகள்தானே! அவைகளைத்திருப்பித் திருப்பிக் கூறுவதால் என்ன பயன் உண்டாகப் போகிறது என்று கூடக் கேட்பர். ஆண்டவனுடைய அருட்டிறங்களை அவசியமில்லாமல் எடுத்துக் கூறுவது, அவனுடைய அளப்பெருந்தன்மைக்கு இழுக்குத் தேடுவதேயாகும் என்று கூடச் சிலர் கருதக் கூடும். இவ்வளவு ஆபத்துக்களையும் தாண்டியேனும் ஆபத்பாந்தவரும் அனாதரட்சகருமான ஆண்டவனுடைய அன்புப்பெருக்கை அவனி அறியும்படி செய்யவேண்டிய ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்கிறது.

20—4—48-ல் சென்னை இராயப்பேட்டையிலுள்ள லட்சுமீபுரம் தேவசிகாமணிமுதலியார் தெருவில் இருக்கும் சுலோசனா என்ற ஐந்து வயதுச் சிறுமியின் உடையில் தீப்பிடித்ததால் அப்பெண் இறந்துவிட்டாள்.

இதுதானா? இதற்குத்தானா இவ்வளவு பிரமாதப்படுத்தினாய்? இது போன்ற நிகழ்ச்சிகள் பல, நாட்டில் சர்வ சாதாரணமாக நடக்கின்றனவே! இவை எல்லாம் அஜாக்ரதையினால் ஏற்படும் சம்பவங்கள். இதற்கும் ஆண்டவன் அன்புக்கும் மேலே கூறப்பட்ட புராண இதிகாசக்கதைகளுக்கும் என்னய்யா தொடர்பு என்று கேட்பீர்கள். தொடர்பென்றால், வேண்டுமென்றே வலிந்துகொண்டுவந்து பொருத்திக் காட்டும் தொடர்பல்ல, ஆண்டவனுடைய அன்புக்கும் இந்நிகழ்ச்சிக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. என்ன—எப்படிப்பட்ட தொடர்பு?

சுலோசனா என்ற சிறுமி தன் வீட்டிலுள்ள பூசை அறையில் இருக்கும் விக்கிரகத்துக்கு மலர் சாத்தினாள். அந்தச் சமயத்தில் பக்கத்தில் இருந்த தீபம் அவள் உடையில் பட்டுத் தீப்பற்றிக் கொண்டது. குழந்தையின் உடையில் பிடித்த தீ அவள் உடம்பிலும் தாவிற்று. வேதனை தாங்க மாட்டாமல் குழந்தை கூச்சலிட்டது. பக்கத்து அறையில் வேறு வேலை பார்த்துக் கொண்டிருந்த குழந்தையின் தாயார் ஓடிவந்து பார்க்கும் போது, உடம்பு முழுவதும் கொப்புளங்கள் ஏற்பட்டு ஆபத்தான நிலைமையில் காணப்பட்டாள். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மருத்துவ முறையும் பயன்படாமல் குழந்தை இறந்துவிட்டது.

இப்பொழுது தெரிகிறதா, ஆண்டவனுடைய அன்புக்கும் இந்நிகழ்ச்சிக்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்ற உண்மை?

பாலுக்காகக் கதறிய பாலகனின்பக்கத்தில் ஆண்டவன் இருக்கவில்லை. வெகு தொலைவில் இருந்து இடப வாகனத்தில் ஏறி வந்தார். பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுக்கவந்த கடவுள் எங்கிருந்தோ பன்றி வடிவத்தில் வந்தார். யானைக்கு மோட்சம் கொடுத்த பகவானும் வெகு தொலைவில் இருக்கும் வைகுந்தத்தில் இருந்து வந்தார். துரௌபதையின் துகிலை வளரும்படிசெய்த ஆபத்பாந்தவன் அரூபியாக இருந்துகொண்டே அம்மையின் துகிலை வளரும்படி செய்தார்.

ஆனால், இங்கு பேசப்படும் சுலோசனா என்ற பெண்—ஐந்தாண்டுக் குழந்தை—அறியாப் பருவம்—ஆண்டவனுக்கு அருகிலேயே இருந்தாள்—இருந்தாள் என்றால்,

ஆண்டவனை அலட்சியமாகக் கருதிக் கொண்டிருந்தாளா? இல்லை! இல்லை!! ஆண்டவனை அன்போடு மலர் சாத்தி வழிபட்டுக் கொண்டிருந்தாள்—பக்கத்தில் இருந்த தீபம் தன் உடையில் பட்டுத் தீப் பற்றிக்கொண்டது கூடத்தெரியாத அளவுக்கு அவளுடைய அன்பு ஆண்டவனிடத்தில் சென்றிருந்தது. ஆனால், பக்கத்திலேயே இருந்துகொண்டு, பாவை நல்லாள் சாத்திய மலரை ஆனந்தமாக அணிந்து கொண்டிருந்த ஆண்டவன், தம்முடைய அன்பையும் தாய்மைக் குணத்தையும் அந்த அறியாச் சிறுமியின்பால் காட்டவில்லை. அந்தக் குழந்தையைக் காப்பாற்றவுமில்லை. தீப்புண் வேதனை பால் குழந்தை போட்ட கூச்சல், அவளைப் பெற்ற தாய்க்குக் கேட்டதேயன்றி, அனைத்துலகையும் படைத்துக்காக்கும் ஆண்டவனுக்குக் கேட்கவில்லை.

கண் முன்னால் நடந்த இந்த உண்மையான நிகழ்ச்சிக்குக் கடவுளின் துணை கிடைக்கவில்லையென்றால், கண்ணால் காணாத நிகழ்ச்சிகளுக்குக் கடவுளின் உதவி கிடைத்ததென்று கூறப்படும் புராண—இதிகாசக் கதைகளை எப்படி நம்ப முடியும்?

மக்களிடையே கடவுள் நம்பிக்கை குறைந்துவரும் இந்நாட்களிலாவது, கடவுள் இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு, தாம் ஒருவர் இருப்பதன் உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டக்கூடாதா? இத்தகைய நல்ல நல்ல சந்தர்ப்பங்களை எல்லாம் கடவுள் நழுவ விட்டுவிடுவதானால்தான் போலும், இன்றைய சட்டசபைகளிலும் கூடக் கடவுளைப்பற்றிக் கிண்டலாகப் பேசும் நிலைமை ஏற்பட்டுவிட்டது!

21—4—48-ல் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில், தோழர் என். எஸ். வரதாச்சாரி அவர்கள்,

> "கல்விக்கான கடவுள், (பெண்பால் பதத்தை அங்கத்தினர் உபயோகித்தார்) அப்படி ஒருவர் இருக்கிறார் என்றால், எல்லோரையும் சமநோக்கத்தோடு தான் கவனிக்கிறார் என்பது உண்மையல்லவா?"

என்று கேட்கக், கல்வி அமைச்சர் மௌனம் சாதிக்க, தோழர் பி. நடேசன் அவர்கள்,

> கல்விக்கான கடவுள் என்று கூறிவிட்டு, அப்படி ஒருவர் இருக்கிறார் என்று அங்கத்தினர் கூறியது சரியா?"

என்று கேட்டதாகவும், உடனே சபையில் இருந்த அனைவரும் சிரித்ததாகவும் செய்தி வந்திருக்கிறது.

20—4—48-ல் இராயப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியையும், 21-4-48-ல் சட்டசபையில் நடைபெற்ற நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப்பார்த்து ஒரு முடிவுக்கு வருவதென்பது, கடவுளைப் பொறுத்த விஷயமாதலால் சிறிது சிக்கலாகவே இருக்கிறது. என்றபோதிலும் இராயப்பேட்டைநிகழ்ச்சியைமட்டும்எம்மால்அலட்சியப்படுத்தவோ மறக்கவோ முடியாது.

# விஸ்வநாதர்

## விசாரம்

"வீராதி வீரனே! வீரமார்த்தாண்டனே! நீர்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று யாரிடம் முறையிடுகிறோமோ அவரே, தொடை நடுங்கி, எதிரியைக் கண்டதும் ஓடுகிறார் என்றால், நாம் என்ன எண்ணுவோம் அவரைப் பற்றி

தேவாதி தேவனே! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! என்று பக்த கோடிகள் பூஜிக்கும் கிழக்கு ராஜபுதனத்தில் பானாலி என்ற க்ஷேத்திரகதிலுள்ள கோயிலிலே கொலுவீற்றிருக்கும் விஸ்வநாதர், தமது அர்ச்சகர்கள் சகிதம் இருக்கும் போது நடுநிசியில் சில 'சக்திகோடிகள்' கைத்துப்பாக்கி சகிதம் உள்ளே நுழைந்து அர்ச்சகர்களின் முன் துப்பாக்கியை நீட்டி அவர்களின் வாயைக் கட்டிவிட்டு விஸ்வநாதருக்குச் சொந்தமான 8000 ரூபாய் பெறுமானமுள்ள நகைகளைக் கொள்ளை அடித்துக்கொண்டு போய்விட்டனர். கொள்ளை அடித்தவர்கள், விஸ்வநாதர் பிரசாதம் உண்ண இருந்த தங்கத் தட்டுகளைக்கூடத் தட்டிக்கொண்டு போய்விட்டனராம்!

"இவ்வளவுதானா உமது விஸ்வநாதரின் வீரப்பிரதாபம்" என்று எவனாவது விதண்டாவாதக்காரன் கேட்டால் என்ன சொல்வது என்று அர்ச்சகர்கள் விசாரப்படுவர்.

ஆலயத்தைத் தொழுகை இடமட்டுமாக்கி, ஆபரணங்களையோ, தங்கத் தட்டங்களையோ, வெள்ளி விமானங்களையோ, அங்கு குவிக்காமல், ஆண்டவனின் அருளைமட்டுமே பெறுவதற்கு ஆலயம் ஓர் இடமென்று அமைத்திருந்தால், இத்தகைய தொல்லையே வந்திராது!

கண்ணடிக்கு, காதற் பேச்சுக்கு, கத்தரிக்கோலுக்கு, கானத்துக்கு, கதைப் பேச்சுக்கு, கலகமூட்டுவதற்கு, விலாசவிசாரணைக்கு, செல்வவான்களின் விளம்பரப் பக்திக்கு, ஆடை அணிகளை அணிந்துகொண்டு மாதர் மனமகிழ்ந்து பவனி வருவதற்குக் கோயில்களை, தக்கவிதத்திலே தந்திரமாக அமைத்துவிட்டனரே யொழிய "அருள் தேட மட்டுமே ஆலயம் இடம்" என்று அமைக்கவில்லை. அதனால் வந்த அனர்த்தந்தான் அக்ரமக்காரர்கள் ஆலய ஆபரணங்களைக் கொள்ளை அடித்தது. என்ன செய்யலாம்! கொள்ளைக்காரரின் விழியும் மனமும் நாடும் விதத்திலே கோயில்களையும் அமைத்து, கொள்ளை அடிக்க வருவோரைத் தடுக்கும் ஆட்களையும் காவலுக்கு வைக்காது போனால், விசார விஸ்வநாதர்கள் அதிகமாகத்தான் இருக்க நேரிடும்! "ஆலயம் அருளிய பிரசாதம் இது" என்று கொள்ளைக்காரர்கள் களிப்பர். விலையுயர்ந்த பொருளை இழந்து விசாரப்படும் விஸ்வநாதருக்கு நாம் என்ன ஆறுதல் கூறமுடியும்? வேறு சில கோவில்களிலே கள்ளர் தாலியைத் திருடிக்கொண்டு போகத் தவிக்கும் அம்மன்கள், ஒரு சமயம் "நமது காலம் கெட்டுவிட்டது" என்று அவருக்கு ஆறுதல் கூறலாம்!!

12-ம் பக்கத் தொடர்ச்சி

பசு நித்தியானந்த மனனம் செய்தான், இனிப்புமட்டும் இந்த ஆனந்தத்தின் மீதுதான் இருந்திருக்கும். ஒருமுறை கனைத்தேன். அவனது கண்கள், நான் இருந்த இடத்திற்குப் பாய்ந்தன! புன்சிரிப்பை பரிசளித்தேன். அவன் புளகாங்கித மடைந்தான், எனது சங்கல்பம் கைகூடுமென்பதற்கு அறிகுறிகள் தாராளமாகக் கிடைத்தன.

சாஸ்திரிகள் நிஷ்டை கலைந்து எழுந்து, நிவேதனம் முதலியவற்றை முடித்துவிட்டு, விபூதி மடலை எடுத்தார், "ஆனந்தம்" என்றழைத்தார். நான் நாணி நடந்து சென்றேன். இளையபூபதி உடலை வளைத்துக் கொண்டு நின்றான். அவனருகேதான் நான் போய்நின்றேன். சாஸ்திரி இருவருக்கும் விபூதி தந்தார். மறு நிமிடம் நான் மறுபடியும் அறைக்குள் வந்துவிட்டேன். இளைய பூபதி, "நாளையு பூஜைக்கு இரவு 8-மணிக்குத் தான் வரவேண்டுமா சாமி" என்று கேட்டான். "ஆம் காலையிலே நான் திருக்கோயில் வழிபாட்டுக்குச் சென்று விடுவேன். பிறகு ஸ்நாசன பூஜைக்குச் செல்வேன். வீடு வர இரவு 7 ஆகும். பூஜை 8-மணிக்குத் தொடங்கும்" என்றார்.

சாஸ்திரிகள் தந்த விபூதிப் பிரசாதத்தைவிட நான் தந்த புன்சிரிப்பு பூபதிக்கு பிரேமையை-பித்தத்தை-ஊட்டிவிட்டது. ருசிகண்ட பூனை சும்மா இருக்குமா?

(தொடரும்)

## என் வாழ்வு

7-ம் பக்கத் தொடர்ச்சி

சிங்காரத்தோட்டம் சென்றபோது, சிந்தாமணி! ஆ சிந்தாமணி! காதகி சிந்தாமணி! என்று நண்டன் கதறிய கதைபோல் முடியுமோ என்று சாஸ்திரிகளுக்குச் சஞ்சலம் வந்தது ஆனால் நான் சிந்தாமணியா? நானே சிறுநாகம், இந்தச் சாஸ்திரிகளை கடித்தேன். விஷம் மண்டைக்கு ஏறிவிட்டது. இனிப் புதுஆளைக் கடிப்பேன், இதில் என்ன பொருமை!

சாஸ்திரிகளின் சஞ்சலம், நான் சிரித்துக்கொண்டே தந்த சூடான காப்பியினால் தீர்ந்துவிட்டது. சாஸ்திரிகள் சமதர்மத்தைக் கூறத் தொடங்கினார்.

இஷ்டசித்தி விநாயகபூஜையால் கஷ்டமின்றி வருமானம் பெற்று வாழும் கணபதி சாஸ்திரி, தாம் போய்க்கண்ட வெற்றிபற்றிக் கூறலானார்.

கேளும் பெண்ணே விமலா! சென்றேன்—கண்டேன்— வென்றேன்— என்று மூன்றே வார்த்தைகளில் முடித்துவிடட்டுமா, அல்லது விரிவாகக்கூறட்டுமா சேதியை; விரிவாகவா? சரி! இலட்சார்ச்சனை நடத்துகிறேன் கேள்.

முதலிலே நீ சொன்ன யோசனை என்னைத்தூக்கி வாரிப்போட்டது. ஜெமீன்தாரர் காரியத்திலே குறுக்கிடுவது என்றாலே மகா ஆபத்து. அதிலும் கலியாண காரியத்திலே குறுக்கிடுவது பிரமாதமானஆபத்து. மேலும் நீயோ, மாப்பிள்ளை வீட்டுக்கே போகவேண்டும், மாப்பிள்ளையையே வசப்படுத்திவிட்டுக்கலியாணத்தைத் தடுத்துவிட வேண்டும் என்று கூறினாய். இது தலைபோகும் காரியமாக முடியுமே என்று தத்தளித்தேன். கடைசியில் தலைபோனாலும், தங்கமே! உன் சேவையிலே போகட்டும், இது எப்போதும் போகப்போகிற தலையே தவிர,சாஸ்தவமா? என்று எண்ணி வேதாந்தியானேன்.

ஜெமீன்தாரிடம் சென்று வில்வம் விபூதி கொடுத்துவிட்டு நின்றேன். இந்தக்காலம்தான் தலைகீழாக இருக்கிறதே! இந்த ஜெமீன்தாரர் அப்பா காலத்திலே, அக்ரகாரத்துக்குள் நுழைவதென்றாலே அடக்க ஒடுக்கமாக நுழைவார். பிராமணனைக் கண்டால் பயபக்தியாக நடப்பார். அவாளை உட்காரச் சொல்லிவிட்டு நிற்பார். அவாளை பிறகு, ஜெமீன்தார்வாள் உட்காரணும் உட்காரணும், என்று சொல்வா. பிறகு உட்கார்ந்து உபசரிப்பா. அந்தக் காலம் மலையேறியே போயிட்டுதேன்னோ, இந்த ஜெமீன்தாரிடம் நான் விபூதி தந்தேன், வாங்கிப்பக்கத்திலே வைச்சுண்டு, வைக்கபபோர் விஷயத்தைப் பற்றிப்பேச ஆரம்பித்தார். வேலன் பேசி, முருகன் பேசி, முத்தன் பேசி ஆனபிறகு, என்னய்யா குருக்கள் க்ஷேமந்தானா? எப்படி இருக்கு உங்க போக்கு வரத்து, என்று ஆரம்பித்தார். நின்றபடி பதில் சொன்னேன். 'உட்காருமே, சூத்ராள் இருக்கிற இடத்திலே உட்காரப்படாதோ'என்றார். என்ன ஜெமீன்தாரவாள் ஏதேதோ சொல்றேள். நமக்குள் இம்மாதிரி பிராமண—சூத்ரா என்ற பேதம் இந்தக்காலத்துக்கு வருமா? என்றேன். அவர் சிரித்துவிட்டு, நடக்காது! என்றார். 'ஆமாம்' என்றேன். 'சரி வந்தசேதி சொல்லுங்கோ' என்றார்.

ஆரம்பமே சுப சூசகமாக இல்லையே. நாம் சொன்னால் நம்புவாரோ மாட்டாரோ என்று சம்சயமாகத்தான் இருந்தது. பார்ப்போம் என்று ஆரம்பித்தேன். பாடத்தை ஒப்பித்தேன்—"கலியாண விஷயமா ஒரு யோசனை. நேற்று இஷ்டசித்தி விநாயகர்சொப்பனத்திலே பிரசன்னமாகி, பிரசாதம் அருளி, "இந்தக் கலியாணத்துக்கு முந்தி சுமங்கலி மூலியமாக மாப்பிள்ளை வசம் சேர்ப்பிக்கணும். மாப்பிள்ளைக்கு மனம் மருளும்படி ஏதோ சேதி போயிருக்கு. அது மாறணும், மங்களகரமாகத் திருமணம் முடியணும்னா இதைச் செய்யுங்கோ என்று சொல்லி மறைந்தார்" என்றேன். ஜெமீன்தாரர் சிரித்துவிட்டு, "குருக்கள் சொப்பனத்திலோ விநாயகா வருகிறார்; விமலா வருகிறதாக் கேள்விப்பட்டேன்" என்றார். எப்படியோ விஷயம் அவர் காதுக்கு எட்டிவிட்டது. மறுத்துப் பேசினால் பயனில்லை. ஆகவே பழுப்பலாக, "ஏதோ கர்மசேஷம்! ஆனால் அது நீங்கி ரொம்ப காலமாயிடுத்து. இப்போ போக்குவரத்தே கிடையாது. அவா, சரியான மனுஷாளாக இருந்தா, தாங்கள் அவாளைக் கைவிடுவேளோ" என்றேன். ஆசாமி ஏமாந்தான், 'சரி! அதுகிடக்குசனி. மாப்பிள்ளை வீட்டுக்கு நம்ம வீட்டுப் பெண்டுகள் யாரும் இப்ப போகக்கூடாது. மேலும் நாமாகவே போனாலும் "பிகுவு" கெட்டுவிடுமே. இதற்கென்ன செய்வது" என்றார். "நானும் என் ஆத்துக்காரியும் போயிட்டு வாரோம். தங்களுக்காக இதுகூடச் செய்யாது போவேனா" என்றேன். "சரி! செய்யுங்கோ. எனக்கு இந்தச் சொப்பனத்திலே சாமி வந்தது, பிரசாதம் கொடுத்தது என்பதிலே நம்பிக்கை கிடையாது. வீட்டிலே பெண்கள் காதிலே விழுந்தா நம்புவா. அதற்காகவே உம்மைப் போகச் சொல்கிறேன், அப்படியே, அங்கே எவனாவது, இந்தக் கமலா விஷயமாக வம்பளப்பான். அதெல்லாம் அறுந்துவிட்டது. அந்தக் கழுதைகள் முகாலோபனம் கூடச் செய்வதில்லை ஜெமீன்தாரர் என்று சொல்லும்" என்றார் ஜெமீன்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது! "இதுபோல் நானும் என் ஆத்துக்காரியும் வருவதாக ஒரு கடிதம் தபாலிலும், ஒரு கடிதம் கையிலும் கொடுக்கணும், அப்பதானே அவாளும் நம்புவா" என்றேன். கடிதம் கொடுத்தார். தபாலில் ஒன்று போட்டார். பார் கடிதத்தைப் படித்து"—என்றுசாஸ்திரிகள் கூறி, ஜெமீன்தாரர் எழுதிய கடிதத்தைக் கொடுத்தார். அது வருமாறு:—

ராஜ பரம்பரை ராதாபுரம் ஜெமீன்தார் பகதூர் பாரிஜாத பூபதி அவர்கள் திவ்ய சமூகத்திற்கு:—

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் அருளின்படி இக்கு நாமும் குடும்பமும் குடிபடைகளும்க்ஷேமம். தங்கள் ராஜ்யாதி காரியங்கள் சுபமாக நடந்து வருகின்றதென்று நம்புகிறேன். தங்கள் திருக்குமாரருக்கு நாது திருக்குமாரத்தியைத் திருமணம் முடிக்கும் விஷயம் தெய்வசம்மதம் பெற்றிருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பவும் இங்கர் சித்திவிநாயகர் கோயில் குருக்களாம் ஸ்ரீ கணபதி சாஸ்திரிகள், மகா வேதக்கியானி அருள் பெற்றவர். அவருடைய சொப்பனத்தில் இஷ்டசித்தி விநாயகா எழுந்தருளிப்பிரசாதம் அருளி, திருக்குமாரர் இளையபூபதி வசம் சேர்ப்பிக்குமாறு கட்டளையிட்டுச் சென்றார். அவரும் அவரது சகதர்மிணியுமாக தங்கள் ராஜ்யத்துக்கு வருகிறார்கள். தனிக்கிரகம் அருளி உபசாரம்செய்வித்து இஷ்டசித்தியார் பிரசாதத்தை

இளையபூபதி பெற்றுப் பூஜிதமாதவராக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். சுபம்

இங்ஙனம்

இளையபூபதிக்கு மாமனாராம்
ஜெமீன்தாரரும்

தமது சம்பந்தியுமான ஜெமீன்தார்.

கடிதத்தைப் படித்துவிட்டு சிரித்தேன், சிரித்தேன், அடங்கவில்லை,

எவ்வளவு முட்டாள்தனம்! ஏதோ காலம் வீதாச்சாரம் மாறுவதால் கொஞ்சம் பிராமணரிடம்முன்போல் பதுங்கிக்கிடக்கும் பழக்கம் சற்று மாறிற்றே தவிர, மற்ற மூடத்தனம் அப்படியேதானே இருக்கிறது. சொப்பனத்திலே விநாயகர் வந்தார் என்ற உடனே எவ்வவவு சுலபத்திலே நம்பிவிடுகிறார்கள். இதனை ஒரு சாஸ்திரி சொன்னதும் சரி என்று நம்பி விட்டாரே இந்தஜமீன்தார் என்று எண்ணிச் சிரித்தேன்.

"எப்படி என்னுடையசமர்த்து?" என்று கணபதிசாஸ்திரி கேட்டார்.

"உங்கள் சமர்த்துப் பெரிது என்றோ பிரமாதம் என்றோ நான் கூறமாட்டேன்" என்றேன். சாஸ்திரிகள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "என் சாமர்த்தியம் பெரிதாகத் தோன்றவில்லையோ?" என்று கேட்டார்.

"அதைவிடப் பெரிதல்லவா, அந்த ஜெமீன் தாரரின் முட்டாள்தனம்" என்றேன் நான். சாஸ்திரிகள் பாடு குஷி! ஆனந்தத் தாண்டவமூர்த்திதான்.

சரி! என்வேலை முடிந்தது. இனிமேல் உன்வேலை என்றுகூறி விட்டு, "வா! போகலாம்!! அங்கே, வா, போகலாம்!" என்று பாடலானார்.

கணபதி சாஸ்திரி மகா காரியவாதி. எடுத்த காரியத்தை எப்படியும் முடித்தே தீருபவர். அந்தச் சமர்த்து இல்லாமலா, ஒரு பிள்ளையார் கோயிலில் இருந்து கொண்டு மாடி வீடும் மனைவியும் கூத்தியும், கொடுக்கல் வாங்கலும், வைரக்கடுக்கனும் சம்பாதித்தார். "அவாளவாள் கொடுத்து வைத்தது" என்று சாஸ்திரி கூறுவார். ஆனால் சாஸ்திரியின் குலத்துக்கு இருக்கும் சௌகரியம் மற்றவர்களுக்கு ஏது? உங்களுக்குச் சொன்னால் வேடிக்கையாகத் தோன்றும். சாஸ்திரிக்கோ நான் மட்டுமல்ல சிநேகிதம். எத்தனையோ இடத்தில் குட டுப்பட்ட தலை அது. தாசிகள் வீடு போவது பாபம் என்று அவர்படித்த சாஸ்திரங்கள் கூறுமே, இருந்தும் அவர் மதித்தாரா சாஸ்திரங்களை? இல்லை! இப்படி முக்கியமான காரியத்தில், தனக்கு இன்பம் வேண்டும் என்பதற்காக, கற்ற சாஸ்திரத்தை கட்டிப் போட்டுவிட்டு காரியவாதியானாரேயொழிய, கட்டுக்கட்டாக விபூதிதான், கழுத்திலே ருத்திராட்சமாலைதான், காலை மாலை ஜெபம், கார்த்திகை சோமவாரம் விரதம், இவைகளிலேகுறைவு கிடையாது! ஆண்டவன் இப்படி முக்கியமான விஷயத்திலே தவறு செய்துவிட்டு, பிறகு விரதமும் வேடமும் போட்டால், என்ன எண்ணுவார் என்று கேட்டேன் ஒரு நாள். "போடிபோ, சுந்திரமூர்த்திஎன்பவருக்கு சாக்ஷாத் சிவனே தாசியின் நேசம் கிடைக்கத் தூது சென்றார் தெரியுமோ" என்று கணபதி சாஸ்திரி கூறினார். இப்படி இருக்கிறது உலகம்!

> **திராவிடர் கழக**
>
> **மாகாண மாநாடு**
>
> **தூத்துக்குடியில்**
>
> **மே, 8, 9, தேதிகளில்**
>
> **நடைபெற**
>
> **ஏற்பாடாகிவருகிறது.**

நான் சொன்னபடி சாஸ்திரி ஜெமீன்தாரை ஏய்த்துவிட்டார். நான் போட்ட "பிளான்" என்ன தெரியுமோ!

ஜெமீன்தாரருக்கு மருமகனாக வரப்போகிறவனை வலையில் போட்டுவிடவேண்டும். அவன் என்னிடம் சிக்கிய பிறகு கலியாணத்தைத் தடைப் படுத்திவிடவேண்டும். ஜமீன்தாரரின் வயிறு எரியவேண்டும். இதற்காகத்தான் சொப்பனத்திலே விநாயகர் வந்தார் என்று கதை கட்டினேன். ஜெமீன்தாரரின் கடிதத்தைஎடுத்துக்கொண்டு நானும் சாஸ்திரியும் மாப்பிள்ளையின் ஊர் சென்று, அந்த ஜமீன்தாரரால் உபசரிக்கப்பட்டு, தனி வீட்டில் அமர்ந்தோம். ஒன்பது நாள் பூஜை செய்து, பிறகுதான் விநாயகர் தந்த பிரசாதத்தை மாப்பிள்ளையிடம் தரவேண்டும் என்று கூறினோம். நான்தான் சாஸ்திரியின் சம்சாரம்! பார்ப்பாத்தி போலவே புடவைகட்டிக்கொண்டேன். பேச்சும் அது போலவே பேசினேன். சாஸ்திரிக்குப் பரம சந்தோஷம் "அடி! ஆனந்தா!" என்று விநாடிக்கு விநாடி கூப்பிடுவார். என் புதியவேடத்துக்கு ஆனந்தம் என்ற பெயர்.

முதல் நாள் பூஜைக்கு மாலையில் மாப்பிள்ளை எங்கள் வீடு வரவேண்டும். இரண்டாம் நாள் எட்டு மணிக்கு, மூன்றாம்நாள் இரவுபத்து மணிக்கு, நான்காம்நாள் நடுநிசிக்கு, வரவேண்டும், பிறகு 6 நாள் எங்கள் விடுதியிலேயே தங்க வேண்டும் என்று ஏற்பாடு. பூஜை மிக அபூர்வமானது; சர்வமங்களமும் தரக்கூடியது என்று சாஸ்திரிகள் கூறினார். பூஜை அபூர்வமானதாகத்தான் இருந்தது.

அந்த இளைஞன் மிக நல்லவன். முதல்நாள்பூஜைக்குப்பட்டுஅணிந்து விபூதி பூசி, சந்தனப்பொட்டுடன், வந்தான். சாஷ்டாங்கமாக சாஸ்திரிகள் காலில் வீழ்ந்து தெண்டனிட்டான். பூஜை ஆரம்பமாயிற்று. இரண்டொரு நிமிடங்களில்சாஸ்திரி கண்களைமூடிக்கொண்டார். நிஷ்டை. ஆமாம்! அது என் ஏற்பாடுதான்.

அவர் நிஷ்டையிலிருக்கும்போது வாலிபன் "நிர்மல சொரூபா! நித்தியானந்தா" என்று மனனம் செய்துகொண்டிருக்கவேண்டும். மனதை வேறு எதன்மீதும் நாடவிடக் கூடாது. கணபதி சாஸ்திரியின் கட்டளை!

சாஸ்திரியின் மனைவியாக இருந்த நான் முதல்நாள் பூஜையின்போது வாலிபனைமதிப்புப்போட்டபடி இருந்தேன். மோகனாஸ்திரங்களை வீசவில்லை. ஆள் சுபாவம் எப்படி, சுலபத்தில் வீழ்த்தமுடியுமா, கொஞ்சம் கடினமா? என்பதைத் தெரிந்து கொள்ளப் பிரயத்தனப்பட்டேன். முதல்நாள் பூஜையில் நான் அதிகம் கலந்துகொள்ளவில்லை. ஒரே ஒரு தடவை பூஜைக்காக ஜெமீன்தார் வீட்டிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த வெள்ளிக்குத்துவிளக்கைத்தூண்டச் சென்றேன். தூண்டிவிட்டு,வெட்கித் தலைகுனிந்து வந்துகொண்டிருக்கையில், என் சேலையின் நுனிபாகம் இளைஞனின் தோளிலே பட்டது! இளைஞன் முகத்திலே இன்பக்களை தோன்றிற்று. வீழ்ந்தான் வலையில் என்று எண்ணிக்கொண்டே, அறையில்சென்று உட்கார்ந்தேன். வாலி

(10 பக்கம் பார்க்க)

## உள்ள உரம் படைத்தோர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கூறும்போது, "பெரியாரின் பெரும் பணியினைப் போற்றும் பண்பு, இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதா! கடல் நீரிலே கனிரசச்சுவையா! காட்டானை, மலரை மாலையாக்கித் தருகிறதா! கபோதி, திங்களின் அழகைப் பாடிக்காட்டுகிறானா!" என்று கேட்கின்றனர். அவர்கள் கேட்பதிலே, நியாயம் இருக்கிறது. நாம் எடுத்து எழுதியதிலும் உண்மை இருக்கிறது. நண்பர்கள் கூறுவதுபோல, ஓமந்தூராரும் ராஜமன்னாரும், மற்றும் பல உயர்நிலையாளர்களும், சமுகத்திலே புதிய நிலையைக்காண வேண்டுமென்பதற்காகத் தளராமல் உழைக்கும்பெரியார் இராமசாமியைப்பாராட்டிப் பேசவில்லை. சீர்திருத்தத்துக்கு உழைத்தவரைப் பாராட்டிப் பேசினர், என்று நாம் எழுதியதும் கற்பனை அல்ல. பாராட்டித்தான் பேசினர்—சீர்திருத்தத்துக்காகப் புரியும் பணியின் அருமை பெருமைகளை, அதற்குக் காட்டவேண்டிய அறிவு ஆற்றலை, அஞ்சா நெஞ்சினைப், பாராட்டிப் பேசினர்—ஆனால் பெரியாரை அல்ல—அந்தப்பெருங்குணம் உதித்துவிட்டால் தமிழகம் தழைக்கத் தொடங்கிவிடுமே—அந்த நற்காரியத்தைச் செய்யவில்லை—அவர்கள் இவ்வளவு புகழ்ந்ததும், பாராட்டியதும், அவர்கள் கண்முன் இன்று நடமாடி, கடும்போருக்கு ஆளாகி, அடக்குமுறை துரத்தினாலும் அயராது, சிறைக்கோட்டம் சீறினாலும் அஞ்சாது, பணிபுரியும், நமது தலைவர், பெரியார் இராமசாமியை அல்ல! அவரை அல்ல என்றால், வேறு யாரை? இந்து மதத்தின் ஊழல்களை, ஜாதி பேதக் கொடுமைகளை, பெண்களின் அடிமைத்தனத்தை, மூடப் பழக்க வழக்கத்தை, பயமின்றி, விளைவு பற்றிய கவலையின்றி, ஆள்வோர் பழைமைக்கு ஆழ்வார்களாயிற்றே, அடக்குமுறை வீசுவரே என்ற அச்சமின்றி, வைதிகர் வெகுண்டுபேச, தேசியவாதி அலட்சியமாகப்பேச, எதிர்ப்பு எல்லாத்திக்கிலிருந்தும் கிளம்ப, இவை எதுபற்றியும் கவலைப்படாமல், அறிவு பரவ வேண்டும் என்ற ஓரே நோக்கத்துக்காகப் பாடுபடுபவர், ஒருவர்தானே, அவர் நமது பெரியார் தானே, ஆகவே பகுத்தறிவுப் படைத் தலைவனைப் பாராட்டிப் பேசினர் என்றால், பெரியாரைப் பாராட்டினர் என்றுதானே பொருள்படும்—அதுதானே—முறை—பாராட்டின அறிவு பரப்பிய ஆண்மையாளனை என்றும் கூறுகிறாய், ஆனால் அதேபோது, பெரியாரைப் பாராட்டவில்லை என்கிறாயே, இது என்ன புதிர்!—என்று நண்பர்கள் கேட்பர்.

அவர்கள் பாராட்டிப் பேசியது, பெரியாரை அல்ல—ஆந்திர நாட்டு அறப்போர் வீரர் காலஞ்சென்ற வீரேசலிங்கம் என்பவரை!!

வீரேசலிங்கம் ஓர் விவேகி—சீர்திருத்தவாதி—சமுகத்திலே கண்ட ஊழல்களை ஒழிக்க உழைத்தார்—வைதிகரின் எதிர்ப்புக்கிடையில் பணியாற்றினார்—தம்முடைய அறிவாற்றலால் அவர், ஆந்திர நாட்டிலே ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்—மக்கள் மனதிலே இருந்த மாசு துடைத்தார். அவருடைய கண்டனங்கள், ஏளன உரைகள், ஆராய்ச்சிகள், அந்த நாட்களிலே இருந்த வைதிகபுரிக்கு பயங்கரமான வெடிகுண்டுகள்! அவருடைய தீரம், திறமை, உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியவை. ஆகவே, முதலமைச்சர் உள்ளிட்ட பலரும், அவரைப் பாராட்டியது கண்டு, நாம் மகிழ்கிறோம்—நாமும் பாராட்டுகிறோம்—ஆனால், அந்த நற்குணவான்களை, ஒருகேள்வியும் கேட்கிறோம், நேர்மையில் நாட்டம் கொண்டவர்களாக அவர்கள் இருப்பது உண்மையானால், மறைந்த மாவீரர் வீரேசலிங்கம்; என்ன காரியம் செய்தார் என்பதற்காக அவரைப் பாராட்டுகிறார்களோ, அதேபணியினை, மேலும் சற்றுத்தெளிவாகவும் தீவிரமாகவும், அவர் காலத்தில் அவருக்கு இருந்த எதிர்ப்பை விட, அதிக அளவினதான எதிர்ப்புக்கிடையிலே இருந்து கொண்டும், பணிபுரியும் சீர்திருத்தச் செம்மலைப் பாராட்டும் பண்பு, அவர்களுக்கு ஏன் ஏற்படவில்லை! ஆந்திரநாட்டு அறிஞரின் அறிவாற்றலைப் பாராட்டும் அன்பர்கள், தமிழகத்திலே அந்தக் காரியத்தைத் தளராது செய்துவரும் ஒரு தலைவரை, ஏன் இருட்டடிப்பினாலேயே சிதைத்துவிடத் திட்டமிடுகிறது. ஓமந்தூரார் நேர்மையாளர்—அவரைக் கேட்கிறோம், நெஞ்சில் கைவைத்துப் பதிலளிக்கவேண்டுகிறோம், வீரேசலிங்கத்தை எதற்குப் பாராட்டினீர்? அவர், உற்றார் உறவினரல்ல! உமக்கு உதவி செய்தவரல்ல? அமெரிக்காவைக் கண்டுபிடித்தவரல்ல, அல்லது ஆண்டவனைக் காணும் மார்க்கத்தை ஊருக்கு அறிவித்தவருமல்ல, ஆங்கிலரை எதிர்க்க உம்முடன்கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நின்றவருமல்ல, உப்புக்காய்ச்சியவரல்ல, உபநிஷத்தைக் கோர்த்தவரல்ல, தண்டி நடந்தவரல்ல தம்பிரானுமல்ல, ஓர் சீர்திருத்தவாதி, பகுத்தறிவுவாதி, ஜாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் சமுகம் சின்னபின்னப் படுத்தப்பட்டு, சீர்கேடு அதிகமாகி, திமிர் கொண்டலையும் சிறுகும்பல் ஓர்புறமும், திகைத்துக் கிடக்கும் பெருங்கூட்டம் மற்றோர் புறமுமாக இருக்கும் இழிநிலையை ஒழிக்க வேண்டும், அப்போதுதான் மக்கள் உருப்படுவர் என்ற நோக்கம் கொண்டு, அதற்காக, அறிவுத்துறையிலே ஓர் புரட்சி ஏற்படவேண்டும் என்று பாடுபட்டவர், என்பதற்காகத்தானே, வீரேசலிங்கத்தைப் பாராட்டினீர்? அவர் கொண்ட கொள்கையையும் அவராற்றிய பணியையும், இன்று, உம் எதிரே, உமது சகாக்களின் தொல்லைகளுக்கு இடையே, செய்துவருபவரை, மறப்பது, நியாயமா? மற்றவர்களுக்கு, அது தேவையான ராஜதந்திரம் என்று கூடத்தோன்றும்! சிலருக்கு, மனம் மரத்துப்போயிருக்கும்! உமது உள்ளம், அப்படிப்பட்டதல்ல, உத்தமமான கொள்கைகளின் ஊற்று, என்று கூறுகிறார்களே, ஏன், உமக்குத் தோன்றவில்லை, உமது நாட்களில், உமது கண்முன் மறைந்த வீரேசலிங்கம் செய்து வந்ததாக மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் நீரே கூறும், நற்காரியங்களை, இங்கு, இன்று, செய்துவரும், உமக்குத் தெரிந்த இராமசாமியைப் பாராட்ட வேண்டும், என்ற எண்ணம்? ஆந்திர நாட்டு சீர்திருத்தவாதி பாராட்டுதலுக்குரியவர், தமிழகத்துச் சீர்திருத்தவாதி, உமது மிரட்டுதலுக்குரியவர்! இதை, எந்த வகையான நியாயமென்று கருதுகிறீர்? முல்லை, மணம் தருகிறது என்று கூறிமகிழ்கிறீர்! மகிழ்ச்சி! முகரும் பக்குவம் பெற்று இருக்கிறீர், அது பற்றிப் பகரும் பண்பும் இருக்கிறது, இரட்டிப்புச்சந்தோஷம். ஆனால் முல்லையின் மணத்தை ரசிக்கும் உமக்கு, தமிழகத்தின் மலர், மணம்தரவில்லையா!

ஜாதிபேதத்தைக் கண்டித்தார் வீரேசலிங்கனார் என்று கூறிப்பூரிக்கும் பெரியீர்! அதே காரியத்தைச்

செய்யும் பெரியார், பழிக்கப்படுகிறாரே, அதற்கு என்ன சொல்கிறீர்!

இந்துமதத்தின் ஊழல்களை எல்லாம் அம்பலமாக்கினார் வீரேசலிங்கம், அவருடைய ஆற்றலை என்னென்பது என்று, ஆர்வத்தோடு பேசிடும் அன்பர்காள்! அதேபணியினை எமது தலைவர் செய்யும் இந்நாளில், அவரை, நாத்திகன் என்று நாத்தழும்பேற நிந்திக்கும் நாணீண்டவர்கள் உள்ளனரே, உத்தமர்களாகிய நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கலப்பு மணம், மறுமணம், காதல் மணம், இவைகளை எல்லாம் அந்த அறப்போர் வீரர் மக்களிடம் வலியுறுத்தினார் என்று வியந்து பேசும் விற்பன்னர்காள்! இந்த மணங்கள் மட்டுமல்ல, அர்த்தமற்ற சடங்குகள் ஒழிந்த, ஆரியப் புரோகிதம் ஒழிந்த சீர்திருத்தத் திருமணங்களைத் தமிழகத்திலே, சர்வசாதாரண நிகழ்ச்சியாக்கிக்காட்டிய சுயமரியாதை இயக்கத் தலைவரைப் பற்றிய நினைப்பு வந்ததும், வீரேசலிங்கத்தைப் பாராட்ட முன்வந்த உமது பண்பு, பட்டுப்போகக் காரணம் என்ன!

தமிழகத்தின் தாழ்நிலைக்கு விளக்கம், இந்த, உமது, மனப்போக்கிலே தான் ஐயன்மீர்! இருக்கிறது. உங்களால், உயர்ந்தவர், உத்தமர், பேரறிஞர், மாவீரர், மதிவாணர், என்றெல்லாம், யாரை வேண்டுமானாலும், பாராட்ட, புகழ முடிகிறது—ஜாதி பேதம் ஒழியவேண்டும், மதப் புரட்டு மடிய வேண்டும், மூடநம்பிக்கை அழியவேண்டும், புதிய சமுதாயம் உருவாகவேண்டும் என்று பேசவும், அந்தக் கொள்கையைப் பேசியவரைப் பாராட்டவும், மனம் இடம் தருகிறது. ஆனால், அதே கொள்கைகளைப் பரப்புவதைத் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட ஒருவரைப் பாராட்ட, உங்கள் மனம் இடம் தருவதில்லை. இந்த மாண்பு, மாநிலத்தில் வேறெங்கும் காண்பதரிது!! தமிழகத்தின் சீர் மங்குவதற்கு, இது தான், மதிவாணர்களே! முக்கிய காரணம்! மற்றவர்களைப் பற்றிக் கூட நாம் அதிகம் கவலைப்படவில்லை — முதலமைச்சரின் மனமும், 'குளக் கல்லும் பிடாரி' என்ற விதமாகவேவா அமைந்திருக்கிறது என்பதைப் பற்றியே சற்றுக்கவலைப்படுகிறோம். ஒழுக்கத்திலும் சத்தியத்திலும், நேர்மையிலும் நீதியிலும், அவருக்கு நிரம்பப் பற்றுதல், என்று கூறுகிறார்கள். அவருமா, கும்பலோடு ஒருவராகி விட வேண்டும்.

வீரேசலிங்கத்தைப்பாராட்டியது, உள்ளத்திலிருந்து கிளம்பிய வாசகங்களாக இருப்பின், அவர்கள், பெரியார் இராமசாமியைப், பாராட்டத் தவறக்கூடாது. பெரியாரை அவர்கள் பாராட்டத் தவறுவதிலிருந்து, இரண்டிலொன்று தான் இருக்கமுடியும் என்று ஆகிறது, ஒன்று, அவர்கள் வஞ்சகமாக, சுயநலம் காரணமாக, பெரியாரைப் பாராட்டாமலிருக்க வேண்டும், அல்லது, வீரேசலிங்கத்தை அவர்கள் பாராட்டியது, உதட்டு அசைவு, சத்தற்ற சத்தம், பகட்டுப் பேச்சாக இருக்கவேண்டும், வேறு, விளக்கம் இல்லை.

"இசையிலே எனக்கு நிரம்ப விருப்பம். இசை அரசர்களிடம் எனக்குப் பெருமதிப்பு" என்று பேசிவிட்டு, இசை அரசு தண்டபாணி தேசிகரா? பாடுவாரா? நானறியேன்!—என்றும் கூறினால், அப்படிப்பட்ட அபூர்வ மனிதரை, நாம் என்ன அடைமொழியிட்டு அழைப்பது!

கடலில் கலம் செரியக்கண்டும், காணாதது போலிருந்து கொண்டு, 'அன்றோர் நாள் ஓடத்தில் அழகாக நான் போனேன்' என்று பாடினால், அப்படிப்பட்டவரை, என்னென்று அழைப்பது.

இந்தியா சென்றேன், அங்குள்ள அழகான கட்டிடங்களைக் கண்டு களித்தேன், என்று அமெரிக்கா சென்று பேசும் ஓர் அறிஞனை, "தாஜ்மகாலின் சிறப்பினைச் சற்று விளக்குக" என்று ஒருவர் கேட்க, "தாஜ்மகாலா! நான் கண்ட கட்டிடங்கள் வேறு! நீங்கள் கூறும் கட்டிடம், ஈரானில் இருப்பதாகக் கேள்வி" என்று அறிஞன் பதிலளித்தால், மேலால் பிரசங்கம் நடக்குமா?

வீரேசலிங்கத்தைப் பாராட்டிடும் பண்பு இருப்பதாகவும், அவருடைய சீர்திருத்தக் கொள்கைகள் சிலாக்கியமானவை, நாட்டுக்குத் தேவையானவை என்று எண்ணும் பண்பு இருப்பதாகவும் காட்டிக்கொண்டு, அதேபோது, நாட்டில் இன்றுபழைமையின் கேட்டினை நீக்கிடும் நற்பணியாற்றிடும்பெரியார் இராமசாமியைத் தூற்றிடத் துணிந்தால், அத்தகையவர்களை, எந்தப் பட்டியில் சேர்ப்பது?

மலர்கொண்டு, மறைந்த வீரேசலிங்கத்தை அர்ச்சிக்கும் கரங்கள், கற்களை வீசுவதா, அவர் சென்ற வழியில் நெடுந்தூரம் முன்னேறி, மக்களுக்குப் புதுவழி வகுத்தளிக்கும் தலைவர்மீது? இவைபற்றி, மற்றவர்கள் சிந்திக்க மறுத்தாலும் கவலையில்லை; முதலமைச்சர் அத்தகைய போக்குக் கொள்ளக்கூடாது—அவருடைய பதவியை உத்தேசித்தல்ல நாம் இங்ஙனம் கூறுவது—அவருக்கு இருப்பதாகக் கூறப்படும் பண்பினை உத்தேசித்துக் கூறுகிறோம். தமிழனுக்கென்று உள்ள பண்பிலே, முதலாவதாகவும் முக்கியமானதாகவும், கூறப்படுவது நேர்மை. இதனை இழந்தேனும், கட்சி மாச்சரியத்தை வளமாக்கிக் கொள்வோம், என்று கருதும் அரசியல் சூதாடிகளின் முகாமில், முதலமைச்சர் இல்லை, என்ற நம்பிக்கையில் இதனை எழுதினோம். நமது யூகம் சரியா தவறா என்பது, அவருடைய எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது. அவருக்கும், அவர் வழி நிற்கும் அன்பர்களுக்கும், தங்கள் பண்பை உலகுக்குக் காட்ட ஓர் வாய்ப்பும் இருக்கிறது.

ஜாதிச் சனியன், கூடாது என்பது பெரியாரின் குறிக்கோள்—நேர்மையுள்ள காங்கிரஸ்காரர்கள் இதனை மறுப்பதில்லை, ஆண்மையாளர்கள், வெளிப்படையாகவே இப்போது ஜாதி முறையைக் கண்டித்துப் பேசத்தலைப்பட்டிருக்கிறார்கள். பெரியார் இந்தச் சூழ்நிலையைக் கண்டு, அவர்களுக்கு ஓர் வாய்ப்பும் ஏற்படுத்தி இருக்கிறார். ஜாதி பேதத்தைக் குறிக்கும் ஏற்பாட்டினை, குறிச்சொல்லை, இப்போது தயாராகும் புதிய அரசியல் திட்டத்திலே நீக்கி, ஜாதி பேதமற்ற ஓர் சமூகம் இங்கு அமைவதற்கு வழி கோலுங்கள், என்று கேட்டுக்கொண்டிருக்கிறார், ஓர் அறிக்கை மூலம். இதற்கு, என்ன பதிலளிக்க முடியும், வீரேசலிங்கத்தைப் பாராட்டும் பண்பினர்!

ஜாதிபேதத்தின் கொடுமைகளை மக்கள் உணரும்படி செய்தவரைப் பாராட்டும், அதே அன்பர்கள், அந்தக்கொடுமையுடன் கடும்போரிட்டுக் கொண்டுள்ள பெரியாரைப் பாராட்டவும் ஆதரிக்கவும் இதுவரை தவறிவிட்டனர்—போகட்டும் — இப்போதேனும் — வீரேசலிங்கத்தைப் பாராட்டியது உள்ளத்திலிருந்து

(16-ம் பக்கம் பார்க்க)

# கனபாடி கவசத்தைக் காண்டீபம் துளைக்கிறது

## 'இந்து'வின் தீவட்டி சேவைக்கு இடி

## 'வகுப்புவாதி' யார்?—விளக்கம்

"வாரீர்! வாரீர்!"—என்று அன்புடன் அழைத்தோம்; ஆண்டு ஒன்பது உருண்டோடின; அன்பழைப்பை ஏற்றுக்கொள்ளாமலும், நமது அறப்போரைக் கேவலப்படுத்திக்கொண்டும் அன்பர் பலர் இருக்கக்கண்டு ஆயாசமடைந்தோம்; ஆயாசமடைந்தோமே தவிர, நம்பிக்கையை இழக்கவில்லை; ஏனெனில், நாம் கொண்டுள்ள கொள்கை, ஆர அமர இருந்து யோசித்துப் பார்க்கும் எவருக்கும், நியாயமானது என்று தோன்றியே தீரும் என்பதை நாமறிவோம். உரிமை உணர்ச்சி, வெள்ளையருக்கும் நம் நாட்டவருக்கும் இடையே ஏற்பட்ட போரின்போது மட்டும் கிளம்பி, அந்தப் போர் முடிந்ததும், உளுத்துப் போய்விடுவதல்ல. உள்நாட்டிலேயே, சிலர், எக்காரணம் காட்டியோ, ஜாதி, மதம், பொருள், போர்த்திறன், முதலிய எந்தக் காரணம் காட்டியோ, மற்றவர்களை அடக்கி ஒடுக்கி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்றால், உரிமை உணர்ச்சி உள்ளத்தில் உறங்கிக் கிடக்காது! அந்த முறையில், நிச்சயமாக, 'தேசியப் போராட்டம்' ஓர் முடிவுக்கு வந்த உடனே, சமூக நீதிக்கான போராட்டம் ஆரம்பமாகும் என்பதை நாம் அறிந்திருந்தோம். அன்பழைப்புக்கு, நிச்சயமாக நண்பர்கள் செவி சாய்ப்பர், என்ற தைரியத்தைத் தளரவிடவில்லை.

"பார்ப்பனரிடம் ஏனய்யா பயம்! அவர்களைக் கண்டு பொறாமை எதற்கு? அவர்கள் 100-க்கு 3 பேர் தானே! நீங்கள் 100-க்கு 97 பேரன்றோ! [மைனாரிடி] சிறுபான்மைச் சமூகத்திடம் பெரும்பாலன சமூகம் ஏன் பயங்கொண்டு, பாதுகாப்புக்கோர வேண்டும் என்று அடிக்கடி தேசியத் தோழர்கள் கேட்பதுண்டு. அப்படிக்கேட்கும்போதெல்லாம், தங்கள் அறிவின் திறத்தைத்தாமே மெச்சிக் கொள்வர் அத்தோழர்கள்.

சமூகத்தைக் கவனித்தால், பார்ப்பனர் சிறு தொகையினர். பார்ப்பனரல்லாதாரின் மூச்சு, பார்ப்பனரைத் திணறவைக்கும், அவ்வளவு அதிக எண்ணிக்கை உள்ளவர்கள்தான் பார்ப்பனரல்லாதார். ஆனால், பார்ப்பனீயம் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல! இதுவரை அதற்குப் பலவழிகளிலும் தரப்பட்ட படைபலத்தைப் பொறுத்திருக்கிறது.

ஊரே அஞ்சும்படியான வீரர்தான்; ஆனால் அவன் மயங்கும் வேளையிலே, மந்திரக்காரன் கையிலுள்ள சிறு வேப்பிலைக்கொத்துக்கு அஞ்சுகிறான். அந்த இலைக்கும், மந்திரக்காரனுக்கும் இருப்பதாகக் கற்பிக்கப்பட்டிருக்கும் மகத்துவந்தான், வீரனும் அஞ்சும்படியான நிலையை உண்டாக்குவதற்குள்ள காரணமாகும். அதைப்போல, பார்ப்பனர் சிறு தொகையினராக இருப்பினும், மோட்சநரகத்திறவுகோலும், ஆண்டவன் அருளை அளக்கும் அளவுகோலும் அவர்களிடம் இருப்பதாகவும், பிற சமூகத்தினரின் சேவையைப் பெறுவது, அவர்களின் பிறப்புரிமை என்றும், அவர்களின் திருப்தி ஆண்டவனுக்கே திருப்தி அளிக்குமென்றும், எண்ணற்ற ஏடுகள் எழுதப்பட்டு, பன்னெடு நாட்களாக மக்கள் இரத்தத்திலே அந்த எண்ணம் கலக்கப்பட்டு விட்டதால், அந்தச் சமூகத்திற்கு, எண்ணிக்கைக்குத் துளியும்பொருத்தமில்லாத அளவு, அமோகமான செல்வாக்கு வளர மார்க்கம் ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் நமது தலைவர்களின் அறிக்கை தெளிவாகக் கூறியிருக்கிறது.

### கடிவாளம் சிறியது....ஆனால்?

கடிவாளம் சிறியது, ஆனால் குதிரை அதனிடம் படும்பாடு யாவரும் அறிந்ததுதான்! மூக்கணாங் கயிறு தனது வால் பருமன் கூடத் தான் இல்லை. ஆனால் மாடு அதனிடம் அகப்பட்டால் அடங்கித்தான் விடும்! அதைப்போல, சிறிய சமூகமாயினும், அதற்கு ஏதேதோ மகத்துவத்தைக் கற்பித்து விட்டால், பிறகு அந்த சமூகத்தவரின் செல்வாக்கு நிச்சயம் வளரும். ஊரின் மீது ஒரு ஆகாய விமானம் வட்டமிட்டால், 9000 பேர் இருப்பினும் ஊரார் அஞ்சுகின்றனர். ஏன்? ஆகாயவிமானத்திலிருந்து வெடிகுண்டு வீசப்படும் என்று தெரிந்ததால்.

எனவேதான், மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமெனப்படும் அரசியல் திட்டம் தரப்பட்டபோது, பார்ப்பனரல்லாத மக்களின் பாதுகாப்பு அவசியம் அதில் புகுத்தப்பட்டு, பார்ப்பனரல்லாதாருக்கு அரசியல் மன்றங்களிலேயுள்ள இட எண்ணிக்கை குறிக்கப்படவேண்டும், என அந்தக்காலத்தில் நமது தலைவர்கள் போராடினர். அதன்பலனாக நம்மவருக்கு நலன் பல கிடைத்தன.

அதைப்போன்ற வரையறை 1935-ம் ஆண்டு வழங்கப்பட்டு இப்போது அமுலிலிருக்கும் புதிய அரசியலில் புகுத்தப்படவில்லை. நமது தலைவர்கள், பார்ப்பனியம் இனியும் பலிக்காது, தன் தவறை உணர்ந்து அடங்கிவிடும் என்று எண்ணியகாரணத்தால், கிளர்ச்சி செய்யாது, கிடைத்ததுபோதும் என்று இருந்து

(2-ம் பக்கம் பார்க்க)

14-ம் பக்கத் தொடர்ச்சி

வெளிவந்ததாக இருப்பின், ஜாதி பேதஒழிப்புக்காகப் பெரியார் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றி, கூடிக்கலந்துபேசி, தங்கள் ஆதரவை அளிக்க வேண்டாமா! அளிப்பது தானே நேர்மையான காரியம்! சங்கராச்சாரியாரும் தம்பிரானும், மடிசஞ்சியும், உடுக்கை ஏந்தியும், சவுண்டியும் பிறரும் இதை விரும்பமாட்டார்கள். ஏனெனில், ஜாதியற்றசமுதாய அமைப்பில் இவர்களுக்கு இடமில்லை! பெரியார் இவர்களை நோக்கி விடுத்ததல்ல அறிக்கை! காங்கிரசிலுள்ள, முற்போக்கு வாதிகளுக்கு ஓர் வேண்டுகோள். ஆம்! வேண்டுகோள்! விரைவில் இதனைக் கவனிக்கத்தவறினால், எச்சரிக்கையாக மாறக்கூடிய வேண்டுகோள்! இதற்கு, முதலமைச்சரும் அவர் போன்றோரும், செய்யவேண்டியது என்ன? எங்கோ, யாரோ, எதற்கோ, ஏதோ ஒரு அறிக்கை வெளியிட்டார்என்று 'ஏனோதானோ'வென்று இருந்துவிடுவது, அடுக்குமா, அழகா, அறமாகுமா? இவ்வளவு காலமாகப் பாடுபட்டு ஒருகட்சியை வளர்த்து வந்தாகிவிட்டது, ஏதோ எங்கள் கஷ்டத்தைக் கண்ணால் கண்டு, எங்களில்சிலருக்கு, ஏதேனும் சில பதவிகள் கொடும், என்று கேட்பதானால், முதலமைச்சர் அலட்சியமட்டுமல்ல, அருவருப்பும் அடையலாம். பெரியாரின் அறிக்கை, அவ்விதமானதா? அறிக்கையுமல்ல அது! அது ஓர் அறைகூவல்! வீரேசலிங்கத்தைப் பாராட்டுகிறீர்கள், காந்தியார் ஜாதியற்ற சமுகத்தை அமைக்கப்பாடுபட்டார் என்று பேசுகிறீர்கள், உங்கள் சொல் கிடக்கட்டும், செயலில் எந்த அளவுக்கு வருவீர்கள், இதோ என் யோசனை, என்று கூறுகிறது அவருடைய அறிக்கை. ஓமந்தூராரும் மற்றச்சிலர்களும், சொல்லின்படி செயலிருக்க வேண்டும் என்பதிலே நாட்டம் கொண்டவர்களானால், இந்த அறிக்கையை ஆதரிப்பதுடன், காங்கிரஸ்மேலிடத்துக்குத் தங்கள் கருத்தைத் திட்டமாகத்தெரிவிக்கவும் வேண்டும். நேர்மையில் நாட்டம்கொண்ட இதழ்கள் அந்த அறிக்கையின் கருத்தினை ஆதரிக்கவேண்டும். அந்தப்பண்பு ஏற்படுமா?

"தமிழ் மணி" எனும் வார இதழ் மட்டுமே, இதுவரை, இந்த நேர்மையைக்கடைப்பிடித்து,

"ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்ற கருத்து கொஞ்சகாலமாக நாட்டிலே அதி வேகமாகப் பரவிவருகிறது. ஜாதி வேற்றுமைகள் கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஜாதி பேதங்களைக் கண்டித்து எழுதாத பத்திரிகைகளே கிடையாது. இதைப்பற்றிப் பேசாத பேச்சாளருமில்லை. பச்சை வைதிகர்களும், பகவத் கீதையிலிருந்து மேற்கோள் காட்டிச் சமரச சன்மார்க்கப் பிரசாரம் செய்கிறனர், ஆனால், இவ்வளவும் பேச்சளவோடும், ஏட்டளவோடுமே நின்றுவிட்டனவே யன்றி நடைமுறையில் இம்மியளவு மாற்றத்தையும் காணோம்.

இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணமென்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்கின்றபோது, இந்த ஜாதி வேற்றுமைகளை ஒழிப்பதில் சர்க்கார் கவனம் செலுத்தாதுதான் என்பது நன்றாகவிளங்கும். உண்மையிலேயே சமத்துவ சமுதாயத்தை நாம்காணவேண்டுமானால், அதற்குச் சட்டத்தின் துணையை அவசியம் தேடியே தீரவேண்டும். இதற்குத் திராவிடர் கழகத் தலைவர் ஈ. வே. இராமசாமி அவர்கள் சமீபத்தில் வெளியிட்டிருந்த அறிக்கை பெருந்துணை புரியுமென்று நம்புகிறோம். அவர் தனது அறிக்கையில் மத்திய சர்க்காருக்குச் சில நல்ல ஆலோசனைகளைக் கூறியுள்ளார். புதிதாக இயற்றப்படும் அரசியல் அமைப்பில் பிராமணாள், சூத்திரன், ஹரிஜன் என்ற வேற்றுமைகள் இருக்கக் கூடாது என்கிறார். அதுமட்டுமன்றி, ஜாதிப் பிரிவுகளைக் குறிக்கும் வார்த்தைகளே அரசியல், மதவியல், சமுதாயவியல்களைக்கொண்ட எந்த ஆதாரங்களிலும் உபயோகப்படுத்தக் கூடாதென்கிறார். அதாவது, ஜாதி பேதங் கலக்கும் படியான நிலையை உண்டுபண்ணக்கூடாது என்பது அவரது அவா. இதனை நாம் வரவேற்கிறோம்; ஆதரிக்கிறோம்.

ஈ. வே. ரா. தமது அறிக்கையில் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிடுகிறார். அதாவது சட்டத்தின் மூலம் இந்த வேற்றுமைகளைக் குறிக்கும் சொற்களை விலக்காமல், ஜாதிகளின் பேரால் இருந்து வரும் சலுகைகளை ஒழிக்கப் பார்ப்பது கொடுமை என்கிறார். ஆம் இது உண்மை. பெயரளவுக்கு ஜாதி வேற்றுமைகளை ஒழிப்பதாகச் சொல்லி வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறைகளை ஒழித்துவிட்டால் இதுகாறும் பிற்போக்காக உள்ள சமுதாயங்கள் முன்னேற மார்க்கமில்லாமற் போகும்.

எனவே, மத்திய சர்க்கார் இவ்விஷயத்தைச் சற்று ஆராய்ந்து பார்த்து அடிப்படையிலேயே கையை வைக்கவேண்டும். இனி எந்த ஆதாரத்தைக் கொண்டும் ஒருவன் இன்ன ஜாதி என்று நிர்ணயிக்க முடியாத நிலையினை உண்டு பண்ணவேண்டும். அப்படிச் செய்தால்தான் உண்மையாக ஜாதி வேற்றுமைகளற்ற சமுதாயத்தை உண்டுபண்ண முடியும். இல்லாவிடில் "புதிய மொந்தையில் பழைய கள்" என்றநிலைமைதான்நீடிக்கும்."

என்று எழுதியிருக்கிறது.

மற்ற இதழ்களும், தலைவர்களும் என்ன செய்யப்போகிறார்கள்? அவர்கள்வீரேசலிங்கத்தைப்பாராட்டியது தூய்மையான கருத்துடன், அவர் கொண்டிருந்த கொள்கையிலே தங்களுக்குள்ள நம்பிக்கையினால், ஆர்வத்தினால், என்பது உண்மையானால், பெரியாரின் இந்த அறிக்கையை ஆதரிப்பதுடன், செயலளவுக்குக் கொண்டுவரத்தக்க முயற்சியில் ஈடுபடவேண்டும். இல்லையேல், நாம் கூறத் தேவையில்லை, அறிவுள்ள எவரும் கூறுவர், இவர்கள் வீரேசலிங்கத்தைப் பாராட்டியது, அவர் ஓர் சீர்திருத்தவாதி, பகுத்தறிவாளர், புதுஉலகச்சிற்பி என்பதற்காகஅல்ல, அவர் வீரேசலிங்கம்பந்துலு (பார்ப்பனர்) என்பதற்காகத் தான், என்று முடிவு கூறுவர்.

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி,
கிளியே!
வாய்ச்சோல்லில் வீரரடி!"

என்ற கவியின்வாக்குக்குத் தாங்களே இலக்கு என்பதைக் காட்டிக் கொள்ளாமல், நேர்வழிநடந்து, நாடு சீருறச் செய்யும் போக்கினை அன்பர்கள் கொள்ளவேண்டும்.

Edited Printed & Published by C. N Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95. Tirukkachinambi Street. Conjeeveram.